இதழ்-06

01.08.2020

# தூமி

பல்கலை மின்னிதழ்



ஏற்பீர்களா என்னை

வேலன் வெறியாடல்



ஆணின் பின்பலம் என்றும் ஆகும் பெண் பலம்

பெருவெள்ளத்திற்கான பயணம்



# நம்பிக்கையில் கை வைக்காதீர்கள்..




இந்த உலகம் இயங்குவதே நம்பிக்கை அடிப்படையில் தான். நாளை காலை விழித்தெழுவோம் என்கிற நம்பிக்கையில்த்தான் அனைவரும் உறங்கச் செல்கிறோம். அது போலத்தான் எல்லா நம்பிக்கைகளும். சிலருக்கு கடவுள் மீது நம்பிக்கை உண்டு. சிலருக்கு அந்த நம்பிக்கை இல்லை. நம்பிக்கை கூடி மூடநம்பிக்கைகளுக்குள் முடங்கிபிபோனவர்களும் உண்டு.

மூடநம்பிக்கைகளை எதிர்ப்பதாக கூறுவதில் நியாயம் இருக்கிறது. ஆனால் முற்று முழுதாக மத நம்பிக்கைகளையே எதிர்ப்பதென்பது மூர்க்கத்தனமானது. ஒருவர் நம்பிக்கையை ஏளனம் செய்வதே தவறெனும் போது அதை இடையூறு செய்வது பெருந்தவறு. அண்மையில் இந்துமத பக்தி இலக்கியமான கந்தசஷ்டி கவசம் சில பிரிவினரால் கேளிக்கைக்கு உட்படுத்தப்பட்டு களங்கப்படுத்தப்பட்டது. இது வன்மையாக கண்டிக்கத்தக்க செயல்தான். ஆனால் அதற்கு எதிர்வினையாற்றுவதாக சிலர் மீண்டும் அவர்கள் மீது சில வேண்டடத்தகாத செயற்பாடுகளில் ஈடுபடுவதும் ஆரோக்கியமானதல்ல.

பகுத்தறிவு வாதிகளில் முதன்மையானவராக நோக்கப்படும் தந்தை பெரியார் கூட இளமையில் துறவறம் பூண்டு காசிக்கு சென்றவர் தான். அதே போல கண்ணனுக்கே தாசனாகி தன் பெயரையும் அவ்வாறே மாற்றிக் கொண்டவருமான கவியரசரும் ஆரம்பத்தில் நாத்தீகரே. எனவே அவரவர் சார்ந்த நம்பிக்கைகள் எப்போது மாறும் என்பது அவரவருக்கே தெரியாத போது அடுத்தவர் நம்பிக்கையில் தலையிடுவது தவறல்லவா?

நம்பிக்கை வையுங்கள்...
நம்பிக்கையில் கை வைக்காதீர்கள்...

# அட்டைப்படம் பற்றி...

ஒளிப்படம் : சாந்தகுமார் கோபிகன்

பழந்தமிழர் வாழ்க்கைமுறை இயற்கையோடு இணைந்தது. ஆடுமாடுகளை தம் குடும்பத்துக்கு உறுப்பினராக கருதி வளர்த்தார்கள். விளையாட்டுக்களை கூட விலங்குகளோடு சேர்ந்தே விளையாடித் திளைத்தனர். அதில் வீரமும் தீரமும் நிறைந்திருந்தது. தமிழகத்தில் ஜல்லிக்கட்டு போல எமது மண்ணிலே மாட்டு வண்டிச்சவாரி முக்கிய விளையாட்டு. துடிப்பான இளையவர்களோடு அனுபவமுள்ள முதியோர்களும் இணைந்து போட்டி போடுவது இரு தலைமுறைக்கான உறவுப்பாலமாகவும் உள்ளது. மாட்டு வண்டிச்சவாரி தலைமுறைகள் கடந்து இன்று வரை தொடர்வது வரவேற்கத்தக்கது.

## இவ்விதழில்

# துமித்தவை.


04 சித்திராங்கதா

07 ஆணின் பின்பலம் என்றும் ஆகும் பெண்பலம்

10 தேசவழமையின் கீழான ஆதனம்

12 நதிக்கரை உறங்குகிறது

13 சாம்பல் கூட சரித்திரம் பேசும்

16 ஏற்பீர்களா என்னை?

19 வேலன் வெறியாடல்

21 மனஉளைச்சல்

23 வழுக்கியாறு – ஆய்வுத் தொடர்

26 தகவலறியும் உரிமைச்சட்டம்

29 குறுக்கெழுத்துப்போட்டி

31 சங்ககிரித்தலைவன்

34 குடாநாட்டின் சுற்றுலா – ஆய்வுத் தொடர்

37 என் இதயம் எழுதும் சொல்

39 மூலிகை குடிநீர்

40 யுவராஜ் சிங் எனும் யுக வீரன்


thumi2016@gmail.com

www.facebook.com/Thumi06




ஆடல் 06

காவ்யமோகன்

காத்தவராயன் வழக்கு

ஈழநாட்டு வீரர்களின் மூச்சுக்காற்றோடு வழித்துணையாய் நிற்பவள் நல்லை வீரமாகாளி. அவளே நிரந்தரமாய் ஆட்சி புரிகின்றாள். நல்லூர் கோட்டையின் மேற்கு வாசல் தலமாய் அன்னை வீரமாகாளி அம்மன் ஆலயம் அமைந்திருந்தது.

நாகைப்பட்டணத்திலிருந்து புறப்பட்டு வந்த தஞ்சை வீரர்களின் பெரும்படை மேற்குவாசல் வழியாக கோட்டைக்குள் அழைத்துவரப்பட்டது. வருணகுலத்தான் யானை மீது அமர்ந்த வண்ணம் கோட்டையின் விலாச அழகை வியந்து பார்த்துக் கொண்டிருந்தான்.
ஊர்வலம் சென்று கொண்டிருந்த ராஜவீதி சனக்கூட்டம் நிறைந்த ஒரு நாற்சந்தியை அடைந்தது. பெரியளவிலான சந்தைத்தொகுதி ஒன்று அங்கு இருப்பதை வருணகுலத்தான் கண்டான். மாலை வேளையிலும் அச்சந்தையின் ஆரவாரம் குறையவில்லை. உணவுப்பொருட்கள் தவிர்ந்து துணிமணிகள், செப்புக்கள், ஆபரணங்கள் என பலதரப்பட்ட பொருட்கள் அங்கு விற்பனையாகிக் கொண்டிருந்தன. கூட்டத்தில் பலர் வந்தவேலை மறந்து ஊர்வலத்தை பார்த்தபடி நின்றனர். சிலர் தம் பணிகளை மும்முரமாக கவனித்துக் கொண்டிருந்தனர்.
சந்தைத்தொகுதியிலிருந்து இடது பக்கமாக செல்லும் ராஜவீதியில் அரசமாளிகைகள் அமைந்திருந்தன.
அவ்வீதி வழியே வந்து ஊர்வலம் அரண்மனை வாயிலை அடைந்தது. யானையிலிருந்து வருணகுலத்தான் கீழே இறங்கினான். முரசுகள் முழங்கத்தொடங்கின. மங்கல வாத்தியங்கள் தொடர்ந்து ஒலித்தன. ராஜ வரவேற்பு தொடங்கியது.

வரிசையில் நின்ற கன்னிகைகள் பூமழை பொழிய வருணகுலத்தானும் மகிழாந்தகனும் அரசவைக்குள் நுழைந்தனர். மாமன்னர் சங்கிலியனைக் கண்டதும் வருணகுலத்தான் கரங்கள் குவிந்தன.

'ஈழ நாட்டின் மணிமுடி வேந்தரை சந்திப்பது இன்று என் பாக்கியமாகிறது.
தஞ்சை வேந்தரின் கட்டளை ஏற்று கடமை புரிய வந்திருக்கும் வந்திருக்கும் வருணகுலத்தானின் பணிவான வணக்கங்கள் அரசே' என்றான்.

சங்கிலியன் ஆர்ப்பரிப்பு அடங்காதவனாய் அரியணையை விட்டெழுந்து வந்து 'வணக்கங்கள் வருணகுலத்தாரே - தம் வருகை எம்மை பேரானந்தப்படுத்துகிறது. எத்தகைய வீரர் எம் தேசத்திற்கு வந்துள்ளீர் என எண்ணும் போது பெருந்தைரியம் கொள்கிறோம்' என்று கூறி வருணகுலத்தானை மார்புறத்தழுவி தன் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினான்.
'வரவேற்பு உபசாரங்கள் எல்லாம் சௌகரியம் தானா?' என்று அவன் தோள்களை பற்றியபடி கேட்டான்.
'அதிலென்ன சந்தேகம் அரசே, என்னைப்போன்ற சாதாரண தளபதிக்கு இத்துணை மரியாதை அளித்து பெருமைப்படுத்திய தங்களின் பெருமிதத்தைக் கண்டு ஆச்சரியம் தான் கொள்கிறேன். களிறு மீது பவனி வரும் போது நான் கொண்ட கர்வம் இயம்புதற்கு அவ்வளவு எளிதல்ல' என்று வியந்தவாறே தன் நன்றியை தெரிவித்தான் வருணகுலத்தான்.


மகிழாந்தகன் அவசரமாய் குறுக்கிட்டு 'அப்படிக்கூறுவது தளபதியாரின் பெருமிதத்தினாலே ஆகும். அவர் கூறுவது போல் ஊர்வலம் அத்தனை சௌகரியமாய் நடந்துவிடவில்லை. எதிர்பாராத சங்கடத்தை சந்திக்க நேர்ந்துவிட்டது' என்றவாறே காத்தவராயன் நிகழ்த்திய ஈட்டித் தாக்குதலையும், அதை எதிர்கொண்டதையும், காத்தவராயனை சிறைபிடித்து அழைத்து வந்தமை பற்றியும் மகிழாந்தகன் அரசரிடம் கூறினான்.

சங்கிலியன் கண்கள் திடீரென சிவந்தன. 'இத்தனை மூடத்தைரியம் இங்கு எவனுக்கு முளைத்தது? அவனை உடனே கண்முன் நிறுத்துங்கள்' என்று கத்தினான்.

வீரர்கள் கைகால் கட்டபட்ட நிலையில் காத்தவராயனை கொண்டுவந்து அரசவையில் நிறுத்தினர். அவன் குனிந்த தலை நிமிராமல் அமைதியாக வந்து நின்றான்.
ஆனால் காத்தவராயனைக்கண்டதும் அரசரின் புருவங்கள் சுருங்கின. முகத்தில் ஒரு மாற்றம் தெரிந்தது. கோபத்தை அடக்கி அரியணையில் சென்று அமர்ந்தான். அரசவையில் இருந்த தென்மராட்சி அதிகாரத்தை பார்த்து 'இவன் ஊமைக்காத்தவராயன் அல்லவா?' என்று கேட்டான்.

'ஆம் அரசே. இவன் இருபாலையைச் சேர்ந்த காத்தவராயன். பிறவி ஊமை. ஆனால் இவன் எவ்வாறு இந்தளவு துணிந்தான் என்றுதான் விளங்கவில்லை' என்றவாறே காத்தவராயனைப் பார்த்து 'மூடனே எதற்காக இந்த நாசச்செயலைச் செய்யத் துணிந்தாய்' என்று கேட்டார் தென்மராட்சி அதிகாரம். காத்தவராயனிடம் அசைவில்லை. குனிந்த தலை நிமிரவில்லை. கோபம் கொண்டவனாய் மகிழாந்தகன் 'இவனிடம் வினவுவதில் அர்த்தமில்லை அரசே, இது அந்த மிக்கபிள்ளை ஆராச்சியின் திட்டம். அந்த மூடனின் ஏவலாலே இந்த ஊமை சதி வேலையைச் செய்யத் துணிந்திருக்கிறான். இவனுக்கு இப்போது கொடுக்கப்போகும் தண்டனை மிக்கபிள்ளைக்கும், இனி இதுபோல் துணிவோர்க்கும் தக்க பதிலாய் இருக்க வேண்டும்' என்றான்.

அரசன் ஆழமான யோசனையில் இருந்தான். வருணகுலத்தான் அரசனை நோக்கி 'அரசே, தாம் வருத்தம் கொள்ளத் தேவையில்லை. நடந்த சம்பவத்தினால் எவ்வித அனர்த்தமும் நேர்ந்துவிடவில்லை. சேனாதிபதி உரிய நேரத்தில் செயல்பட்டு ஈட்டி என்னை நெருங்காமல் தடுத்தார். இல்லாது போய்விடினும் அந்தச்சிற்றீட்டியால் இந்த வருணகுலத்தானை அசைத்திருக்க முடியாது. இதற்காக வருத்தப்படுவது அநாவசியம். அத்தோடு இது அந்த மிக்கபிள்ளை ஆராச்சியின் சதிச்செயல் என்று தெரியுமாயின் வீணாய் இம்முதியவரை தண்டிப்பதிலும் பயனில்லை என்றே தோன்றுகிறது' என்றான். 'ஆம் மன்னரே. வருணகுலத்தார் சொல்வதே சரியானது. இது மிக்கபிள்ளையின் மூடத்தனத்தையே அறிவிக்கிறது. எய்தவனை அறிகின்ற போது அம்பினைத்




தண்டிப்பதிலும் பயனென்ன? இது குறித்து நாம் நேரவிரயம் செய்ய வேண்டிய அவசியமில்லையே - அத்தோடு இது நாம் தளபதியாரை வரவேற்கும் நேரம்' என்றார் ராஜமந்திரி ஏகம்பரனார்.

சேனாதிபதி இதனை ஏற்றுக்கொள்ள இயலாதவன் போல் 'ஆனால் மந்திரியாரே, எத்தனை முறைதான் அந்த மிக்கபிள்ளை ஆராச்சியையும் அவனது சூழ்ச்சிகளையும் மன்னித்துக் கொண்டே செல்வது? அவனை பொறுத்துக் கொள்வது முடிவில் பேராபத்தை தரக்கூடியதாகலாம். இப்போதே இதற்கு முடிவு கட்ட வேண்டும். இந்தக் காத்தவராயனுக்கு கொடுக்கப்படும் தண்டனை இனி யாரும் இப்படியான சதிகளை புரிய துணியாதபடி இருக்க வேண்டும். அதன் காரணமாகவே பொறுமை காத்து இவனை அரசவைக்கு அழைத்து வந்தேன்' என கோபமாய் கூறி முடித்தான். சங்கிலியன் தெளிவான குரலில் பேசத் தொடங்கினான். 'மகிழாந்தகா, நீ சொல்வது மிகச்சரி. ஆயினும் இது வீரத்தளபதி வருணகுலத்தானை வரவேற்கும் சமயம். அதற்காகவே அவை கூடியிருக்கிறது. இந்நேரம் நாம் இது குறித்து முடிவெடுக்க தேவையில்லை. இப்போது இவனை பாதாள சிறையில் அடைத்து வையுங்கள். இவன் கதையை பிறகு பார்த்துக் கொள்ளலாம்' என்றான்.

அரசனின் வார்த்தைகள் சேனாதிபதியின் முகத்தில் வாட்டத்தை உண்டுபண்ணியது. மந்திரி ஏகாம்பரனார் மீது ஒரு மெல்லிய கோபமும் தோன்றியது. வருணகுலத்தான் சேனாதிபதியை நோக்கி கண்களை பொறுமையாக மூடி புன்னகை புரிந்தான். 'அரசரின் செயலே இந்நேரத்திற்கு உகந்தது' என்று சொல்வது போல் இருந்தது அந்தப் புன்னகை. மகிழாந்தகனும் அதை உணர்ந்தது போல் பதிலுக்கு புன்னகைத்தான். ஆனாலும் அவன் மனதின் ஓரத்தில் பல கேள்விகள் உருவாகிக் கொண்டிருந்தன.

வீரர்கள் காத்தவராயனை அழைத்துச்சென்ற பின் சங்கிலியன் வருணகுலத்தானை பார்த்து 'வருணகுலத்தாரே, நாளை வெள்ளிக்கிழமை. எம் சத்திரிய குல வழக்கப்படி நல்லை வீரமாகாளி சந்நிதியில் தங்களிற்கு வாள் வழங்கும் விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஈழத்தில் வீரனாய் களமிறங்க அன்னைகாளிதேவியின் நல்லாசியை பெற்றுக்கொள்ளும் விழாவாகும். தாம் அவசியம் பங்கேற்க வேண்டும்' என்றான்.

விழா நிகழும்...




நல்லூர்க் கோட்டை மாதிரி அமைப்பு

உதவி : 'நல்லூர் இராஜதானி: நகர அமைப்பு' –வநகிரிதரன்

*"ராஜயோகம் கூடி வந்து மாலை சூடும் வேளை இன்று*
*வாழ்க பல்லாண்டு கல்யாண வாழ்க்கை நூறாண்டு"*

மனித வாழ்வில் மூன்றே மூன்று தருணங்கள் தான் அவனுக்கு தனித்துவமானவை. அவை பிறப்பு, இறப்பு, திருமணம். பிறப்பு, அவனது விருப்பமின்றி படைத்தவனால் தீர்மானிக்கப்படுவது. இறப்பு, வாழ்க்கை போராட்டத்தில் எதிர்நீச்சல் போட முடியாது தோல்வியடைந்து தன் உயிரை தானே மாய்த்துக்கொள்ளாத வரை, மரணம் என்பதும் முன்னரே தீர்மானிக்கப்பட்டது தான்.






இ.தனிஷ்ரன்

*"மனிதன் நினைப்பதுண்டு வாழ்வு நிலைக்குமென்று*
*இறைவன் நினைப்பதுண்டு பாவம் மனிதனென்று"*

பிறப்புக்கும் இறப்புக்கும் இடைப்பட்ட இந்த போராட்டம் நிறைந்த வாழ்க்கையில் இளமைக்கும் முதுமைக்குமான சிறியதொரு காலப்பயணத்தில் ஒருவன் தானே தனக்காக அமைத்து கொள்ளக் கூடியது தன்னுடைய திருமணம் மட்டும் தான். அது கூட பலருக்கு சாத்தியமாக இருப்பதில்லை. வாழ்க்கையின் முக்கிய நிலைமாற்றம் திருமணம்.

சாதாரணமாக ஒரு தமிழ் திருமணம் என்றால் ஆணோ பெண்ணோ திருமண வயதை எட்டும் போது "புரோக்கர்" மூலமாக பெற்றோர் திருமண பேச்சை ஆரம்பிப்பார்கள். தமிழர்களை பொறுத்த வரை இந்த திருமண பேச்சில் முதலாவது தெரிவுப்பிரிவு சாதி. கட்டாய தெரிவும் கூட. எந்த பேச்சுத்திருமணமும் "சாதி" மாறி நடந்ததாக வரலாறே இல்லை.




*"மதம் கொண்டு வந்தது சாதி இன்றும் மனுசனை துரத்துது மனு சொன்ன நீதி"*

அடுத்த கட்டம் சாதகம். இந்த சாதகம் தெரியும் போதே பொருளாதார அடிப்படைகள், தொழில் நிலை, குடும்ப பின்னணி என எல்லாம் கருத்தில் கொள்ளப்பட்டு புரோக்கர் காட்டும் போட்டோவையும் குணநலன்களையும் வைத்து பொருத்தம் பார்க்கும் படலம் ஆரம்பமாகும். தமிழ் சோதிட அடிப்படையில் மொத்தமாக திருமணத்திற்கென்று பன்னிரெண்டு பொருத்தங்கள் பார்க்கப்படுகிறது. பன்னிரெண்டில் எட்டு பொருத்தம் சரியாக இருந்தால் மேற்கொண்டு பேச்சுகள் ஆரம்பிக்கும். அத்தனை பேச்சுக்களும் "சீதனம்" என்ற பாதை வழி சென்று மணவறையை அடையும் திருமணச் சந்தை.

*"இருமனம் சேர்ந்து ஒரு மனமாகும் திருமணம் இன்று*
*இரு உயிர் சேர்ந்து ஒரு உயிராகும் ஒத்திகை இன்று"*

பனிரெண்டு பொருத்தங்களாவன, தினப்பொருத்தம், கணப்பொருத்தம், மாகேந்திரப் பொருத்தம், ஸ்திரீ பொருத்தம், யோனிப் பொருத்தம், இராசிப் பொருத்தம், இராசி அதிபதி பொருத்தம், வசியப் பொருத்தம், ரஜ்ஜிப்பொருத்தம், வேதைப் பொருத்தம், நாடிப் பொருத்தம், விருட்சப் பொருத்தம்.

இந்த பன்னிரெண்டு பொருத்தங்களில் தினப் பொருத்தம், கணப் பொருத்தம், யோனிப் பொருத்தம், ராசிப் பொருத்தம், வேதைப் பொருத்தம் மற்றும் ரஜ்ஜு பொருத்தம் ஆகியவை முக்கியமாகப் பொருந்த வேண்டிய பொருத்தங்கள்.

"புருஷன் பொஞ்சாதி பொருத்தம் தான் வேணும்
பொருத்தம் இல்லாட்டி வருத்தம் தான் தோணும்"

புகைப்படம் பார்த்து பிடித்து ஜாதகம் பொருந்தி சீதனம் கொடுத்து மந்திரமோதி அக்னி சாட்சியாய் கரம்பற்றி மாலை மாற்றி தாலி கட்டி கோலாகலமாக திருமணம் நடக்க, ஊரும் கூடி வாழ்த்தும்.

//கொஞ்சிக் கொஞ்சிப் பேசிவரும் தமிழ் போல
அஞ்சி அஞ்சி வீசிவரும் அலைபோல
நெஞ்சில் என்றும் தங்கும் சங்கக்கவி போல
நூறு ஜென்மம் சேர்ந்திருக்க வாழ்த்துகிறோம் பூத்தூவுகிறோம் //

எல்லா திருமணங்களுமே சந்தோஷமாகவே நடப்பதில்லை. சில சீதனப்பிரச்சினை, உறவு முறை பிரச்சினை என கலவரமாக நடந்து முடியும். எப்படியோ திருமணம் நடந்து முடிந்தால், திருமணத்தின் பின் வாழ்க்கையே புதியதாக மாறும். எவ்வளவு சந்தோஷம் வருகிறதோ அந்த அளவுக்கு சவால்களும் காத்திருக்கும். சண்டைகள், கொஞ்சல்கள், ஊடல்கள், கூடல்கள், சரசங்களென்று வாழ்க்கை புதியபாதையில் வேகமெடுக்கும். இந்த இடத்தில் தான் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வது அவசியமாகிறது.

//இரண்டு வரிகளில் திருக்குறள் இருந்திட காரணமிருக்கிறதே
கணவன் ஒரு வரி மனைவி ஒரு வரி அர்த்தம் கிடைக்கிறதே
யார் பெரிதென்ற எண்ணங்கள் வேண்டாம் சிந்தித்துப்பாருங்களே
சரிசமமாய் உள்ள தூண்களில்தானே நிற்கும் கோபுரங்கள்//

திருமண வாழ்க்கை என்பது ஒரு ரதமென்று எடுத்தால், அங்கே தேரின் ஒரு சில்லு கணவன் என்றால் மறு சில்லு மனைவி. திருமண வாழ்க்கையின் அடி ஆதாரமே சமத்துவமும் விட்டுக்கொடுப்பும் தான். இந்த இரண்டுமே சரியாக இருக்கும் போது கணவன் தன்னை மனைவியாகவும் மனைவி தன்னை கணவனாகவும் நினைந்து காதலிக்க ஆரம்பிக்கிறார்கள். திருமண வாழ்க்கை சிறக்கிறது.

//கொஞ்சம் நீங்கள் விட்டுத்தந்தால்
சொர்க்கம் உங்கள் வீட்டைத்தட்டும்
காலம் எல்லாம் உங்கள் நெஞ்சில் பூப்பூக்கும் //

காதல் திருமணத்துக்கும் பேச்சு திருமணத்துக்குமான பிரதான வித்தியாசமே புரிந்துணர்வு பிரச்சினை தான்.
பெரும்பாலான காதல் திருமணங்களில் ஒருவரை ஒருவர் நன்றாக புரிந்து மனமிணைந்த பின்னர் தான் அவர்கள் உடலால் இணைகிறார்கள். ஆனால் பேச்சு திருமணத்தில் உடலால் கூடிய பின்னர் தான் துணையுடைய தேவைகள், ஆசைகள் என்ன என்பதையே அறிய வேண்டியிருக்கிறது.

"ஒன்றாய் இரண்டாய் மூன்றாய்
அந்த வள்ளுவன் தந்தது முப்பால்
உனக்கும் எனக்கும் விருப்பம்
அந்த மூன்றாம் பால் அல்லவா?
பால் விளக்கங்கள் நீ கூறு
ஊர் உறங்கட்டும் உரைப்பேன் கேளு"

இருவரும் பரஸ்பரம் மனம் விட்டு பேசி ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளாத போது அவர்களுக்கிடையில் நம்பிக்கை வளர்வது சாத்தியமின்றி சந்தேக கிருமி தொற்றிக்கொண்டு மண வாழ்க்கையையே சீரழித்து விடும். அனைத்துக்கும் ஒரு தீர்வு மனம் விட்டு பேசுதல்.

//சந்தேகம் தான் தீயை வைக்கும்
நம்பிக்கை தான் தீபம் வைக்கும்//

திருமண வாழ்வின் முக்கிய அச்சாணி தனிப்பட்ட சுதந்திரம். நல்ல நம்பிக்கையும் சிறந்த காதலும் உள்ள உறவில் தான் இது சாத்தியமாகிறது. பல காதல் திருமணங்களில் கூட மணமுறிவில் முடிவதற்கான காரணமே காதல் என்ற பெயரில் தனிப்பட்ட சுதந்திரத்தின் மேலான மேலாதிக்கம் தான்.

//அவர் அவர் எண்ணம்
அவரவர்க்குண்டு ஆதிக்கம் வேண்டாமே
ஒரு தனிப்பட்ட சுதந்திரம்
இருவருக்கிடையில் அவசியம்
இருக்கட்டுமே//

சிறந்த காதலில், காதலிக்கும் போது காதலர்கள் புருஷன் பொண்டாட்டியாக வாழ்தலும் திருமணத்தின் பின் நண்பர்களாகி வாழ்வை கொண்டாடுவதும் தான் திருமண வாழ்வின் வெற்றி ரகசியம். சின்ன சின்ன விஷயங்களில் எல்லாம் காதலை கொட்டி மகிழ்தல் தான் உறவு நிலைப்பதற்கு அவசியமானது. ஒன்றாக பேசுவதற்கு நேரம் ஒதுக்குதல், துணையுடன் ஊர் சுற்றுதல், சேர்ந்து உணவு உண்ணுதல், உணவு, உடை நன்றாக இருக்கும் போது துணையை பாராட்டுதல், பிறந்தநாள், திருமண நாள் என்பவற்றை கொண்டாடுதல், கொஞ்சுதல், லவ் யூ சொல்லுதல் என நிறைய நிறைய குட்டி குட்டி விஷயங்களில் தான் காதல் வாழ்கிறது.

//ஒருவருக்கொருவர்
பாசம் தந்து நண்பர்கள்
ஆகுங்கள்
ஒவ்வொருநாளும்
ஒருமுறையேனும்
ஒன்றாய்
உண்ணுங்கள்//



பல மணமுறிவுக்கு பிரதான காரணம் ஆண்களின் தடித்தனம் தான். ஆண் என்ற ஆணவத்தில் உறவில் சமத்துவம் இல்லாது போக, அது கட்டிலில் பாலியல் திருப்தியின்மையாக நீளுகிறது. பாலியல் திருப்தியின்மை என்றால் அங்கே காதல் இல்லாமல் வெறும் காமம் கொண்ட இரண்டு உடல்களும், துணையின் ஆசையையும் தேவையையும் புரிந்து கொள்ளாத காம வேட்கையும் மட்டுமே இருப்பதாக பொருள். தன் துணையை அணுஅணுவாய் ரசிக்க தெரியாத ஆணினால் காதலை காமத்தில் கலக்க முடியாது.

"திரி குறையட்டும் திரு விளக்கு
நீ இடம் சுட்டி பொருள் விளக்கு
அட கடவுளை அடையும் வழியில்
என் பேர் எழுதிருக்கு"

அத்தனை காதலும் மொத்தமாக பாயும் இடம் கட்டில். காதலுக்கு வர்ணம் இல்லை. உருவம் இல்லை. காதல் எவ்வளவு ஆழமானது எவ்வளவு பெரிதானது என்று துணைக்கு நிரூபிக்க வேண்டியது கூடலின் போது தான். ஆசைகள் உடையும் போது மனக்கசப்பு உருவாகி மணமுறிவாக முடிகிறது.

"புலி மானை வேட்டை தான் ஆடிடுமே
காட்டில்
மான் புலியை வேட்டை தான் ஆடுமிடம்
கட்டில்''

காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி கல்யாணமாகி கட்டிலில் கலந்து மேலும் காதலில் மூழ்கி இன்பத்தில் திளைத்தல் தான் நல்ல மணவாழ்க்கை. திருமணத்தின் பின் பல காதலர்களே காதலை மறந்து நீதிமன்றம் ஏறி விவாகரத்து பெறும் இந்நாளில்,

காதல் என்றால் என்ன? கல்யாணம் என்றால் என்ன? காமம் என்றால் என்ன? வாழ்க்கை என்றால் என்ன?

"எழுதும் சொற்களின்
இனிமை மொத்தமும்
இசையில் சேர்வதால் உண்டாகும்
தவழும் தென்றலை வருடும் மெல்லிசை
செவியை சேர்வதால் நன்றாகும்
செவியை தொட்டிடும் இசையின் கற்பனை
மனதை சேர்வதால் மெய்யாகும்
இதனைப் போலவே இதயம் என்றுமே
இணைய சேர்வதே அன்பாகும்
ஆசைகளின் தொடுவானை அடைவதே
கல்யாணம்
காதலுடன் கலந்தாலே வாழலாம் எந்நாளும்

நீ எனக்கும் நான் உனக்கும்
அழகு அழகு அழகே அழகு!"

# தேசவழமையின் கீழான ஆதனம்

**(Property Under The Thesawalamai)**

6

கடந்த சட்டத்தின் சாரலில் 'தேசவழமையின் கீழான திருமணம்' என்ற தலைப்பின் கீழே வலிதான திருமணம் ஒன்றிற்கான தேவைப்பாடுகள், வடக்கு மாகாண மக்களினுடைய பண்டைய கால திருமணங்கள் அதன் பின்பான மாற்றங்களும் தேசவழமைச் சட்டத்தின் கீழான திருமண வழிமுறைகளையும் இன்றைய காலத்தில் அது எவ்வாறு மாற்றம் பெற்று இருக்கின்றது என்பதனையும் திருமணங்களை நீதிமன்றங்கள் எப்படி உற்று நோக்குகின்றன பற்றியும் ஆராய்ந்திருந்தோம்.

இன்றைய சாரலானது தேசவழமையின் மிக முக்கியமான விடயமாக காணப்படும் தேசவழமை இன் கீழான சொத்துக்கள் பற்றியும் அவற்றிற்கான அறிமுகங்களை தேடுவதாகவும் பண்டைய கால தேசவழமையின் கீழான ஆதனங்கள் பற்றியும் அவ் ஆதனங்களுக்கான இன்றைய தேசவழமையின் சட்ட ஏற்பாடுகள் பற்றி அலசுகின்ற ஒரு தேடலாக அமையும்!

தேசவழமை சட்ட ஏற்பாடுகளில் காணப்படுகின்ற ஆதனங்களினுடைய அறிமுகத்தை உற்று நோக்குகையில்....!!!

தேசவழமையினுடைய ஏற்பாடுகளின் படி திருமணம் ஒன்றின் போது கணவனால் கொண்டு வரப்படுகின்ற ஆதனம் 'முதுசம்' எனப்படும். அதாவது கணவனால் திருமணத்திற்கு கொண்டு வருகின்ற சொத்துக்கள் 'முதுசம்' என்று அழைக்கப்படும்.

அதேபோன்று ஒரு திருமணத்தில் மனைவியினால் கொண்டு வரப்படுகின்றன ஆதனமானது 'சீதனம்' என அழைக்கப்படும். அதாவது பெண்ணினால் அந்த திருமணத்திற்கு கொண்டு வருகின்ற சொத்துக்கள் 'சீதனம்' ஆகும்.

திருமணத்தின்போது எட்டப்படுகின்ற அத்தனை லாபங்களும் "தேடிய தேட்டம்" என்று அழைக்கப்படுகின்றன.

ஆனபோதும்...!!

"யாழ்ப்பாண திருமண உரிமைகள் மற்றும் வழியுரிமை கட்டளைச் சட்டத்தின் "15 ஆம் பிரிவானது ' ஆண் ஒருவருடைய அல்லது பெண் ஒருவருடைய ' பெற்றோரினால் அல்லது ஏவரேனும் முன்னோரினால் அவர்களின் இறப்பின் காரணமாக வம்சா வழியாக வருகின்ற ஆதனங்களை 'முதுசம்' என ஏற்பாடு செய்கின்றது.

ஆகையினாலே ஒரு திருமணத்தின் போது ஒரு பெண் தனது கணவன் போன்று தனது பெற்றோரிடமிருந்து அல்லது எவரேனும் தன்னுடைய முன்னோரிடம் இருந்து 'முதுசம்' என்கின்ற ஆதனத்தையும் அதனோடு 'சீதனம்' என்னும் ஆதனத்தையும் கொண்டு வர முடியும்.

மேற்குறிப்பிட்ட ஆதனங்களான முதுசம், சீதனம் மற்றும் தேடிய தேட்டம் இவற்றுக்கு மேலாக யாழ்ப்பாண திருமண உரிமைகள் மற்றும் வழியுரிமை கட்டளைச் சட்டத்தின் 16 ஆம் பிரிவானது ' பெற்றோர் அல்லது முன்னோர்கள் அல்லாத உறவினர் ' ஒருவரது இறப்பின் விளைவாக குறித்த வம்சாவளி மூலம் வந்து சேருகின்ற ஆதனங்களை "உரிமை" என ஏற்பாடு செய்து இன்னொரு வகையாக ஆதனங்களை வகைப்படுத்துகிறது.

அ.திருமருகன்
மாணவன்
இலங்கை சட்டக்கல்லூரி

சட்டத்தின் சாரல்

ஆகவே தேசவழமையின் கீழான ஆதனங்களாக பின்வருவன காணப்படும்



1. முதுசம்
2. சீதனம்
3. தேடிய தேட்டம்
4. உரிமை

மேலே குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு ஆதன வகைகள் பற்றிய ஒரு நீண்ட மற்றும் ஆழமான தேடலாக மட்டும் இல்லாமல் நாம் அன்றாடம் சந்திக்கின்ற சொத்து தொடர்பான விடயங்கள் பற்றியும் தற்போதைய எங்களுடைய சமூகத்தில் ஆதனங்கள் தொடர்பாக எழுகின்ற கேள்விகளுக்கான விடைகளை தாங்கியதாக இனி வரப்போகின்ற துமியினுடைய சட்டத்தின் சாரல் பகுதிகள் தூறும்.

மேலும் இந்த தேசவழமையின் கீழான ஆதனங்களை இன்னொரு வகையாகவும் வகைப்படுத்த முடியும். அவையாவன

- தந்தைவழி ஆதனம்
- தாய்வழி ஆதனம்

தந்தைவழி ஆதனம் என்பது தனது தந்தை அல்லது அவரது முன்னோர்கள் அல்லது தந்தையினுடைய சகோதரர்கள் மூலம் பெறப்படுகின்ற ஆதனங்களாகும்.

இதே போன்று தாய்வழி ஆதனம் என்பதும் தனது தாய் அல்லது அவரது முன்னோர்கள் வழியாக பெறப்படுகின்ற ஆதனங்களாகும்.

தேசவழமையின் கீழான ஆதனங்களின் விடயத்தில் இன்று இந்த தேசவழமைச் சட்டத்தின் சில பிரிவுகள் சமுதாயத்தில் ஏற்பட்டிருக்கின்ற மாற்றங்களுக்கு இசைவான முறையில் திருத்தியமைக்கப்படவில்லை என்ற விமர்சனங்கள் நீண்டகாலமாக முன்வைக்கப்பட்டு வருதை நாம் காணக்கூடியதாக உள்ளது. சமகாலத் தேவைகளுக்கு ஈடுகொடுக்கக்கூடிய முறையில் அவசியமான மாற்றங்களுடன் சட்டத்தைத் திருத்தியமைக்க வேண்டுமென்றும் பலரும் கூறியிருப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது.



தமிழ் மக்கள் பெரும்பான்மையினராக வாழ்ந்துவருகின்ற பாரம்பரிய பிரதேசங்களில் குடிப்பரம்பலின் இன விகிதாசாரத்தை மாற்றியமைக்க வேண்டுமென்று காலங்காலமாக வலியுறுத்தி வருகின்ற சக்திகள் வடக்கிலே வழக்கில் உள்ள தேசவழமைச் சட்டத்தை எப்போதுமே வெறுப்புடனேயே நோக்கி வந்திருக்கிறார்கள்.

தேசவழமைச் சட்டம் அடிப்படையில் வடக்கில் வெளியாட்கள் காணியும் சொத்தும் வாங்குவதைத் தடுக்கிறது என்று இவர்கள் கூறிவந்திருக்கிறார்கள்.

கறுப்பு ஜூலை கலவரத்தின் பின்னரான காலகட்டத்தில் இந்தியாவின் அனுசரணையுடன் இனப்பிரச்சனைக்கு அரசியல் இணக்கத் தீர்வொன்றைக் காண்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோது தமிழ் மக்களின் பாரம்பரிய தாயகக் கோட்பாடு பற்றிய பேச்சுகள் எழுந்த வேளையில் இந்த தேசவழமை பற்றிய

பிரச்சினையை மிகப் பெரிதாக உருவாக்கம் பெற்றது.
அப்போது அவர்களுக்குச் சார்பாகக் குரல் கொடுத்து தேச வழமைச் சட்டத்தை மாற்ற வேண்டுமென்று பல்வேறு நபர்களால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

உண்மை எது எனில்!

அவர்கள் கூறிவருகின்றதைப் போன்று எந்தவொரு இலங்கை பிரஜையும் தனி உடைமையாகவுள்ள எந்தச் சொத்தையும் வாங்குவதை தேசவழமை தடைசெய்யவில்லை. அத்துடன் இச்சட்டம் தமிழர்களுக்கு எந்தவிதமான பிரத்தியேகமான சலுகையையும் வழங்கவில்லை.

இன்றைய காலத்தில் மூன்று தசாப்தகால போரின் முடிவுக்குப் பின்னரான மீள் குடியேற்றங்களும் தற்போதைய சூழ்நிலையில் தமிழர்களின் பாரம்பரிய வாழ்விடங்களை தொடர்ந்தும் பேணிப் பாதுகாக்க முடியாமல் போய்விடுமோ என்ற நியாயமான பயத்தை அவர்கள் மத்தியில் தோற்றம் பெற செய்துள்ளது.

அத்தகையதொரு சூழ் நிலையில் தான் தேசவழமைச்சட்டத்தில் திருத்தங்களைச் செய்வதற்கு மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகள் அந்தச்சட்டம் தொடர்பிலான பிரதிபலிப்பை வரலாற்றுப் பின்புலத்திருந்து வெளிக்காட்ட வேண்டிய தேவையை எங்களுக்கு ஏற்படுத்துகின்றன.

அதனால் தான் சட்டத்தின் சாரல் எனும் பகுதி மூலம் எம்மவர்களுக்கு தேசவழமையை எடுத்துச் சொல்லும் பணியை கையில் எடுத்து இருக்கிறோம்.

சாரல் தூறும்.....



# சாம்பல் கூட சரித்திரம் பேசும்

*கோபி பிரகாஷ் திருக்குமரநாதன்*

சேகுவேரா பொலிவியாவில் புரட்சி விதைகளை விதைத்துக் கொண்டிருந்த வேளை துரோகத்தின் நிழல்கள் அவரை பின்தொடர கைது செய்யப்பட்டு சிறைப்படுத்தப்படுகின்றார். அவரை விசாரித்து சுட்டுக்கொல்வதற்கு முன்னர் பொலிவியாவில் ஒரு பாடசாலையில் சிறை வைத்திருந்த வேளை வாழ்க்கையின் இறுதி நிமிடங்களில் தனக்கு உணவு வழங்க உள்ளே வந்த ஆசிரியையிடம் அவர் பேசியதாக கூறப்படுகின்ற வார்த்தைகள்

"பள்ளிக்கூடத்தை ஏன் இவ்வளவு மட்டமாக வைத்திருக்கிறீர்கள் இங்கே படிக்கின்ற என் தோழர்கள் பாவமில்லையா?"

இவ்வாறு பச்சை இரத்தம் ஒழுகும் போதும் பச்சை குழந்தை சிரிப்ப பாரு என்று பாஷா பாணியில் தங்களுடைய அத்தியாயத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கும் தருணத்தில் கூட அவர்கள் ஆற்றிய மகத்தான வார்த்தைகளுக்கு பெயர் போனவர்கள் தான் சேகுவேரா மற்றும் ஜோன் ஆஃப் ஆர்க். பெண்கள் என்றால் அழகுக்கும் காதலுக்கும் மட்டுமே வரலாற்றில் பெயர் போனவர்கள் என்று கட்டியெழுப்பப்பட்ட மாய விம்பத்தால் க்ளியோபட்ராவையும் , ஜுலியட்டையும் தெரிந்த எம்மில் பெரும்பாலானோர் ஜோன் ஆஃப் ஆர்க்கை மறந்தது ஒன்றும் விந்தை அல்ல. வாருங்கள் துமியின் மறுபக்கத்தின் ஆறாவது பக்கத்திற்குள் நுழைவோம்.

"சிங்கப்பெண்ணே சிங்கப்பெண்ணே ஆணினமே உன்னை வணங்குமே" என்று பெண்களின் பெருமையை பறைசாற்றுவதாக நாங்கள் நம்புகின்ற பாடலில் வருகின்ற ஏகாரம் கூட மறை பொருளில் ஆணினத்தை தான் உயர்த்திப்பிடிக்கின்றது. இவ்வாறு அன்று தொட்டு இன்று வரை வீரத்தினால் ஆண்களை உயர்த்திப் பிடித்த வரலாற்றின் பக்கங்களை மாற்றியமைக்க எத்தனையோ ஜான்சி ராணிகள், வேலு நாச்சியார்கள் மற்றும் ராணி மங்கம்மாக்கள் தோன்றினாலும் அவர்கள் அனைவருக்கும் விதை போட்டது பதினெட்டு வயது சிறுமியான ஜோன் ஆஃப் ஆர்க் என்று கூறலாம்.

ஆம், உலக சரித்திரத்தின் முக்கிய பக்கமான நூற்றாண்டுபோர் நடைபெற்ற காலப்பகுதி. பிரிட்டிஷாரின் பிடியில் ப்ரான்ஸ் சிக்குண்டு ப்ரெஞ்சு மன்னான ஏழாம் சார்ள்ஸ் கைப்பொம்மையாக்கப்படுகின்றான். 1412 ஜனவரி 6 அன்று ஒரு விவாசயக் குடும்பத்தில் மூன்றாவது குழந்தையாக அவதரித்த மங்கை "உன்னால் முடியும்" என நம்பியாண்டார் நம்பியைப் போல "எனக்கு கடவுளின் அசரீரி கேட்டது " என்று பதினேழு வயதில் தனக்கு முன் வந்து நிற்பாள் என்று சார்ள்ஸ் மன்னன் அவ்வேளை யோசித்துக்கூட இருக்கமாட்டான். அவளுக்கு கேட்டது தேவதூதர்களின் குரலோ அல்லது ஊரார் கூறியது போல "இவளுக்கு பிரம்மை பிடித்திருக்கிறது அதனால்தான் இப்படி பிதற்றுகிறாள்" உண்மை எதுவாக



மறுபக்கம்




இருப்பினும் காலச்சக்கரம் அவளை மன்னனிற்கு முன்னே கூட்டிச் சென்றது.

"மன்னா என்னிடம் படையை கொடுங்கள் பிரிட்டிஷாரை தோற்கடிக்கின்றேன்,அதன் பின்னே மீண்டும் தாங்களே இந்நாட்டை ஆளலாம்" என்றாள் மன்னனுக்கோ ரஜினியைப் போல ஒரு நிமிஷம் தலையெல்லாம் சுத்திடிச்சு. பதினாறு வயது வரை மாடு மேய்க்கும் தொழிலை புரிந்த சிறுமி திடீரென வந்து நாட்டின் படைகளைத் தாருங்கள் என்ற கேட்டாள் யாருக்குத்தான் தலைச்சுற்றாது. ஆனால் இறுதியில் ஒரு நாட்டு மன்னனும் தளபதியும் இச்சிறுமியை நம்பி படைகளை ஒப்படைக்குமளவுக்கு மதமானது அக்காலத்தில் வேரூன்றியிருந்தது. அவர்கள் அவளைச் சிறுமியாக நினைத்து படைகளை ஒப்படைக்கவில்லை .அவள் கடவுளின் அருள் பெற்ற பெண் என்று நம்பியதால்தான் ஒப்படைத்தார்கள்.

எது எப்படியோ தங்கம் எங்கு கிடைச்சாலும் அது தற்செயலாகத்தான் கிடைக்கும். அதேபோன்று பன்னிரெண்டாயிரம் போர் வீரர்கள் உள்ளடக்கியப் பிரெஞ்ச்சுப் படைக்கு தலைமை தாங்க ஜோன் என்ற தங்கச்சுரங்கமே கிடைத்தது. அல்லி பூக்கள் பொறிக்கப்பட்ட வெண்கொடியுடன் பதினெட்டு வயது பெண்ணின் தலைமையில் ஆர்லேன்ஸ் நகரை விரைந்து வந்த ப்ரெஞ்சுப் படையைக்கண்டு ஆங்கிலேயர்கள் முதலில் சிரித்தனர்.பின்னர் சிரித்த பற்களை பொறுக்க கூட நேரமில்லாமல் புறமுதுகு காட்டி ஓடினார்கள். ஆம் ஆங்கிலேயரின் பிடியில் இருந்த "ஆர்லென்ஸை மீட்ட நங்கை " என்று சரித்திரத்தில் தனது முதல் பக்கத்தை எழுதினாள். அதுவரை அவளை சந்தேகித்த ப்ரெஞ்சு மக்கள் தொட்டு ஆங்கிலேய அரசு வரை "உண்மையிலேயே இவள் தெய்வப்பிறவித்தானோ"என்று ஆச்சரியப்பட்டார்கள்.

பிரான்ஸில் லா அர் நதிக்கரையில் பிரிட்டிஷார் கட்டிய கோட்டைகளில் இருந்து வெளியேறுமாறு ஆரம்பத்தில் கடிதம் அனுப்பி பார்த்தாள். அது அவர்களுக்கு புரியவில்லை எனவே அவர்களுக்கு புரிகின்ற பாஷையில் ஜோன் தெறிக்கவிட அங்கிருந்து ஆங்கிலேயர்கள் மீண்டும் தெறித்து ஓடினார்கள். லாஷத்தே ,முஸ்தியோ கோட்டைகளையும் தம்வசமாக்கி ஆங்கிலேயரை பிரான்ஸின் வடக்கு மூலையிற்கு விரட்டியடக்க ஏழாம் சார்ள்ஸ் பிரான்ஸின் மன்னனாக முடிசூட்டிக் கொண்டான். யுத்ததின் ஒரு கட்டத்தில் பலத்த காயம் அடைந்து சிகிச்சைக்காக ஜோன் போரிலிருந்து விலக படை சோர்வடைந்தது."உன்னால முடியாதுனு யாராச்சும் சொன்னா நீ நம்ப வேண்டியது அவங்கள இல்ல உன்னைத்தான்" என்று தன் படைக்காக போரில் மீண்டும் இணைந்து இறுதிக்கோட்டையையும் சுவீகரித்துக்கொண்டாள். என்னைக்கேட்டால் அவளுக்கு கேட்ட "உன்னால் முடியும்" என்ற குரல் அவளுடைய மனசாட்சியென்று தான் கூறுவேன். அந்த தன்னம்பிக்கைதான் அவளுக்குத் தன்னால் ப்ரான்ஸிலிருந்து முற்றாக ஆங்கிலேயரை விரட்டமுடியும் என்று உத்வேகத்தை அளித்தது.



அதே உத்வேகத்துடன் பரீஸை நோக்கி விரைந்த அவளுக்கு சார்ள்ஸ் மன்னனின் ஆதரவு இம்முறை கிட்டவில்லை.எனினும் தனது முயற்சியில் மனம் தளராத விக்கிரமாதித்தனைப் போல 500 படை வீரர்களை திரட்டிக் கொண்டு போர்முனைக்கு விரைந்தாள். ஈற்றில் பலம் குறைந்து அப்போது பிடித்த சில தளங்களில் ஒன்றான காம்பைஞ் கோட்டைக்கு பின்வாங்கும் போது பர்கண்டி மாநில அரசின் துரோகத்தால் கடத்தப்பட்டு சொல்லனாச் சித்திரவதைக்குட்படுத் தப்பட்டு ஆங்கிலேய அரசிடம் கையளிக்கப்படுகி றாள். ஆங்கிலேயே அரசின் அடிமையான தலைமை குரு ஒருவர் அதற்கு தீர்ப்பளித்தார்.





தீர்ப்பிற்கு செல்ல முன் முடியாது அன்பே சிவம் படத்தில் வரும் ஒரு காட்சியினை மீட்டுவோம். வீட்டிற்கு குணமடைந்து வரும் கமல்ஹாசனிற்கு பொட்டு வைத்து ஆரத்தி எடுப்பார்கள்.அவர்களது நம்பிக்கைக்கு மதிப்பளித்து அதனை அவர் ஏற்றுக்கொள்வார் ஆனால் அவர்கள் சென்ற பின்னர் அதனை அழித்து விடுவார் ஏனெனில் அவருக்கு அதில் நம்பிக்கை இல்லை. அதனைப்போன்று தான் மதம் என்பது பலருக்கு நம்பிக்கையின் மறு உருவம் .குறிப்பாக தன்னால் இனி எதையும் செய்யமுடியாது என்று நிர்க்கதியாக இருக்கின்ற ஒரு மனிதனுக்கு இருக்கின்ற ஒரே ஆறுதல் கடவுள் தான். அதில் சிலருக்கு நம்பிக்கையில்லை என்பதற்காக பலரது நம்பிக்கையை குறை கூற முடியாது.அதே சமயத்தில் கடவுளின் பெயரை முன்னிலைப்படுத்தி இதுத்தான் மதம் என்று மனிதர்களால் தோற்றுவிக்கப்பட்ட அனைத்தும் சரியென்றாகி விடாது. ஆனால் ஜோன் ஆஃப் ஆர்க்கின் காலக்கட்டத்தில் மனிதர்கள் மதத்தினால் மதம் பிடித்துப்போயிருந்தார்கள்.

"மத குருமார்களிடம் மட்டுமே கடவுள் பேசுவார் மாடு மேய்க்கின்ற உன்னிடமெல்லாம் பேசமாட்டார். நீ சூனியக்காரி உனக்கு கேட்ட குரல் சாத்தானின் குரல் எனவே ஆங்கிலேயர்களுக்கு எதிராக படையெடுத்தமையால் உனக்கு மரண தண்டனை விதிக்கின்றேன்" என்று தீர்ப்பளித்தார். இவ்வாறு அன்று தொட்டு இன்று வரை மதத்தினால் மனிதன் கொண்ட மதம் மட்டும் இன்னமும் குறையவில்லை. 1431 இல் நடந்த வழக்கு 1920 இல் மீள்விசாரிக்கப்பட்டு ஜோனிற்கு புனிதர் பட்டம் வழங்கப்பட்டாலும் அன்றைய சமூதாயத்தில் அவளுக்கு கிடைத்த பட்டமோ "சூனியக்காரி "

பத்தொன்பது வயது சிறுமியான ஜோன் அப்பொழுது "கடவுளின் கட்டளைப்படி நான் நடந்தேன் எனக்கு கேட்டது அவரின் குரலே" என்றாள். பாவம் ஜோன் கடவுள் தனக்கும் சொந்தம் என்றும் நினைத்தாள். ஆனால் கடவுள் தமக்கு மட்டும் தான் சொந்தம் என்ற பாவிகள் கூட்டம் அவளைத் தீக்கிரையிட்டார்கள். தனலானது அவளது தேகத்தை எரிக்க அவள் தீ மூட்டிய மனிதரை நோக்கி கூறிய இறுதி வார்த்தைகள்.

"தள்ளி நில்லுங்கள் நெருப்பு உங்கள் மீதும் பற்றிக் கொள்ளப்போகின்றது"





# ஏற்பீர்களா என்னை

தொண்டரடிப்பொடியன்

இந்த பூமிப்பந்து பிரிவினைகளின் பிறப்பிடம். பிரிந்த பிளவுகளில் ஒரு துண்டுதான் பூமி. அந்த பூமிக்குள் எத்தனை பிரிவினைகள். பிரியமானவர்களே, பிரிவினைகளால் அதிகம் பாதிக்கப்பட்டவன் நான். என் குரலுக்காக எவர் காதாவது இரவல் தரப்படுமா என்ற ஏக்கத்திலேயே பலநாள் ஊமையாய் இருந்தவன் நான். வர்ண நுரைகளுக்குள் காணாமல்ப்போன கப்பச்சினோ நான். ஆம்! வெறுப்புக்கள் நிறைந்த கறுப்பு பேசுகிறேன்.

ஆதி மனிதன் மிகச்சிறந்த கெட்டிக்காரன். சொகுசாய் அவன் வாழ அடிமைகள் தேவைப்பட்டன. ஓடுவது ஒரே ரத்தம். போர்த்தியது ஒரே சதை. நான் சொல்வதைக்கேட்கும் அடிமைகளை ஆக்குவது எப்படி? ஆழமாய் சிந்தித்தான். தான் சார்ந்தோரை உச்சியில் வைத்தான். நெருக்கமானவரை அடுத்த படியில் வைத்தான். தூரமானவரை தூரத்தே வைத்தான். கடவுளைத் துணைக்கு வைத்தான். தொழில் வழியே குலம் என்றான். பின் குலம் வழியே தொழில் என்றான். மொத்தமாய் சேர்த்து வர்ணாச்சிரமம் என்று பெயர் வைத்தான். தன் சக மனிதனையே தனக்கு கீழ் என்று நம்ப வைத்தான். அந்த நம்பிக்கையை இன்றுவரை நீர்ந்துபோகச்செய்ய அனுமதிக்காமல் காவல் வைத்தான். யார் அந்த காவல் என்று கேட்கிறீர்களா? கௌரவம், மரியாதை, பயம், வழக்கம் என பல காவல் இருந்தாலும் பாசம் எனும் காவல்தான் பிரதானம். காதல் எனும் ஆயுதம் கொண்டு காவலை காலாவதியாக்க பல புரட்சிகள் நடந்தன; நடக்கின்றன; நடக்கும்.

என் கதை என்று விட்டு எவன் கதையோ கதைத்துக்கொண்டிருக்கிறேன்? என்ன செய்ய? மனிதனைப்பற்றி கதைக்காமல் இங்கே எவர் கதையும் எழுதப்பட முடியாது. எல்லாவற்றுக்குள்ளும் மூக்கை நுழைத்து வைத்திருக்கிறான் அந்த பேசத்தெரிந்த மிருகம். தன்னையே வர்ணாச்சிரமமாய் பிரித்தவன் என்னையும் வர்ணங்களில் இருந்து பிரித்தான். எல்லா வர்ணங்களும் எனக்குள் அடக்கம். ஆனால் நான் வர்ணங்களுக்குள் அடங்கேனாம்! எத்தனை பெரிய துரோகம். எனக்கு நடந்தவற்றை இன்னும் சொல்கிறேன். கேளுங்கள்!

இன்பமும் துன்பமும் கலந்ததுதான் அனைவரது வாழ்க்கையும். ஏதோ ஒரு நாள் அதிக துன்பத்தை தந்துவிட்டால் அந்த நாளை கறுப்புநாள் என்கிறார்கள். உங்களுக்கு துன்பம் என்னாலா நேர்ந்தது? என்னை ஏன் துன்பப்படுத்துகிறீர்கள்? அதுமட்டுமா மரணத்தின்



நயனி



குறியீடாய் அமங்கலத்தின் அடையாளமாய் என்னை நிறுவியது ஏன்? எமனது ஆடை முதல் எமனேறும் வாகனம் வரை என் வர்ணமே தேர்வு செய்து மரணத்தின் நிறமாய் என்னை மாற்றிவிட்டீர்கள்.

விளைவு.... கறுப்பை ரசிப்பாரில்லை. கறுப்பாய் பிறந்தவரை ரசிப்பார் இல்லை. கறுப்பு மேனியை நிறமேனியாக்க நிறைய திரவியங்கள் பாவிக்கத்தொடங்கினார்கள். ஏன் கறுப்பும் ஒரு நிறமென்பதை மறந்தார்கள். தொட்டால் சிவக்க வேண்டும் சிலருக்கு. தொடாமலே சிவக்க வேண்டும் பலருக்கு. சுட்டாலும் அடையாளம் காட்டமாட்டேன். நான் அல்லவா சுயமானவன். நிரந்தரமானவன். ஆறறிவுள்ளவனுக்கேன் இந்த அறிவு விளங்கவில்லை. அலுவலகங்களில் வேலைக்கு ஆள் சேர்ப்பாம். பிற தகுதிகளோடு நிற தகுதியும் பார்க்கப்படுகிறது. திருமணங்களில் இது உச்ச கட்டம். மாப்பிள்ளை கறுப்பேயானாலும் பெண்பிள்ளை வெளுப்பாய் வேண்டுமாம். முடியில் நான் இருந்தால் இளமை. முகத்தில் நான் இருந்தால் அழகின்மை. வெள்ளையாகும் முடியை கறுப்பாக்க சாயம் பூசுகிறான். கறுப்பாகிப்போன முகத்தை வெள்ளையாக்க இன்னொரு சாயத்தை பூசுகிறான். அதனை அதன் பாட்டில் விட மாட்டான். அவன் தான் மனிதன்.

பகலையா இரவையா அதிகம் விரும்புகிறீர்கள்? பகல் இரைச்சசலானது. இரவு அமைதியாது. இரவு ஓய்வு தருவது. இரவு யோசிக்க வைப்பது. இரவில் நிம்மதியான உறக்கம் வராதவன்தானாம் உண்மையான பிச்சைக்காரன். பிச்சைக்காரர்களை வெளிச்சம் போட்டுக்காட்ட நான் வேண்டும். ஆனால் ஏற்க மாட்டார்களாம் என் இருட்டை. ஏன் என்று இறுக கேட்டேன். இருட்டு பயமானது என்கிறார்கள். இருட்டு பாதுகாப்பில்லை என்கிறார்கள். இருட்டு பயமாகவும் பாதுகாப்பற்றும் ஆனது யாரால்? பழி போடுவதில் மனிதனே உனக்கு நிகர் நீயே தான்.

இப்படி எல்லா இடங்களிலும் என்னையும் என் நிறத்துக்காரர்களையும் நிராகரிப்பதே வழமை என்று நம்ப வைத்து விட்டார்கள். கறுப்பர்கள் என்றால் அடிமைகள் என்றார்கள். அந்த அடிமைப் பெண்கள் மூலம் தான் பிரசவத்திற்கான சத்திரசிகிச்சை முறையே கண்டுபிடிக்கப்பட்டதாம். அதற்காக அந்த கற்பிணித்தாய்மார் வைத்தியப்பரிசோதனை எனும் பெயரில் கொடுமைப் படுத்தப்பட்டார்கள். நிறத்தால் அவர்கள் பரிசோதனை எலிகளாக்கப்பட்டமை தகுமா? இன்று கூட அந்த வல்லரசு நாட்டில் என் நிறத்தவன் ஒருவன் மூச்சுக்காய் ஏங்கி சாகடிக்கப்பட்டிருக்கிறான். ஒபாமா சனாதிபதியானதும், கறுப்பினத்தவர் உலக அழகி ஆவதும் ஏமாற்று வேலை. அடி மனதில் அடிமையின் வர்ணமாய் கறுப்பு நம்ப வைக்கப்பட்டிருக்கிறது. அந்நிலை மாற்ற முயன்றவர்கள் பலர். மார்ட்டின் லூதர் கிங், நெல்சன் மண்டேலா போன்றவர்கள் அதில் முக்கியமானவர்கள். ஆனால் வெள்ளை நிறத்திலிருந்தே என் நிறத்துக்கு ஆதரவாய் ஒரு குரல் அதிகாரத்தோடு கர்ச்சித்தது. ஆம் அமெரிக்க





சனாதிபதியாய் இருந்த ஆபிரகாம் லிங்கன் கறுப்பினத்தவரின் அடிமைத்தனத்தை இல்லாது செய்து சட்டம் கொண்டுவந்தார். நாடு இரண்டானது. உள்நாட்டுப்போர் மூண்டது. கலகத்தை அடக்கினாரே தவிர லிங்கன் தான் அடங்கிப்போகவில்லை. அவர் போல சிலராவது அவர்களுக்குள் இருப்பது தான் என் குறைந்தபட்ச ஆறுதல்.

சகல ஆன்மாக்களும் ஈற்றில் ஐக்கியப்படும் இடம் ஆண்டவன் திருவடி என்றுதான் அனைத்து மதங்களும் சொல்கின்றன. சகல வர்ணங்களும் ஐக்கியப்பட்டால் நான் உருவாகுவேன். ஆக, வர்ணங்களின் கடவுள் நான். ஆண்டவனையா புறக்கணிக்கிறீர்கள்? தெய்வக்குற்றம் அல்லவா ஏற்படப்போகிறது.
இறுதியாக சில வரிகள். புறக்கணிப்பின் வலி உணர்ந்தவருக்கே தெரியும். அதுவும் செய்யாத பழிக்காக புறக்கணிக்கப்படுவதென்பது கொடுமையிலும் கொடுமை. என்ன தவறு செய்தேன்? கறுப்பாக பிறந்தது என் தவறா? கருணையுள்ளவர்களே, கறுப்பும் ஒரு வர்ணம் என்பதை மனதில் ஆழப்பதியுங்கள். பிரிவினை வர்ணங்களிலோ, வண்ணங்களிலோ இல்லை மனித எண்ணங்களில்த்தான் என்பதை உணருங்கள். நான் கொண்டாடப்பட வேண்டும் என்று கேட்கவில்லை திண்டாட்டம் இல்லாமல் வாழ்ந்தாலே போதுமென்றுதான் கேட்கிறேன்.

ஏற்றுக்கொள்ளுங்கள் என்னை.....

**இப்படிக்கு,**
**கறுப்பு**

## இவ்வாரம் படம் சொல்லும் கதை



# வேலன் வெறியாடல்

விக்கி சாரங்கன்

சமூகவலைத்தளத்தில் வராவாரம் ஏதோ ஒன்று சூடான விவாதங்களுக்கு உள்ளாகிறது.சர்ச்சைகள் கிளப்பிவிடப்படுகின்றது. ஈழத்தின் எல்லைக்குள் சில நின்றுவிடுகின்றன. சில எல்லைகடந்தும் விடுகின்றது. கொரோனா காலம் பலரை முகப்புத்தகத்தோடு ஐக்கியமாக்கிவிடுகின்றது. சில முகப்புத்தக சர்ச்சைகள் இலக்கிய உலகிலும் பல தேடல்களை உருவாக்கி விட்டிருக்கின்றது. யாழ் நூலக திறப்பு தொடர்பில் புலம்பெயர்ந்த எழுத்தாளர் கிளப்பிய சர்ச்சை இரண்டு காணொளிகளை பொதுவெளிக்கு கொண்டுவந்தது.

இராவணன்,நல்லூர்,கோணேஸ்வரம் என்று சர்ச்சைப்பட்டியல் நீண்டுகொண்டிக்க அடுத்த சர்ச்சை இந்தியாவில் இருந்து கிளப்பட்டது. வளர்முக நாடுகளின் அரசியல் ஆசனங்களை சாதியம்,மதவாதம் என்பன பிரதானமாய் தீர்மானிக்கிறது. ஒரு தரப்பு இவற்றால் வாக்குகளை கவர மறு தரப்பு இவற்றை இல்லாதொழிப்பதாக கருதி வாக்குகளை கவர முற்படும் .இதுவே வழமை. கறுப்பர் கூட்டம் என்ற யூரியூப் பக்கத்தில் கந்தசஷ்டி கவசத்தில் ஆபாசவார்த்தைகள் இருப்பதாக தெரிவித்த காணொளி தீயாய் பரவி சர்ச்சை களத்தை ஆரம்பித்து வைத்தது. அக்காணொளியை வெளியிட்டவர்கள் அவர்களின் கொள்ளைகள் அவர்களின் பின்புலம் சார்ந்தெல்லாம் காரசாரமான விவாதங்கள் முன்வைக்கப்பட்டது . இங்கும் அரசியல் இருந்தது. தமிழ்கடவுள் முருகன் என்றொரு தரப்பு சொல்ல முருகனில் நிகழ்ந்த சமஸ்கிருத கலப்பை இன்னோர் தரப்பு பேசியது. கட்டுரை எழுதப்படும் போது சர்ச்சைகளம் சற்றுவீரியம் குறைந்து போய்விட்டது.

இந்தக்கட்டுரை ஆதித்தமிழர்களின் வேலன் வெறியாடலை பற்றி பேசுகிறது. தொல்குடி தமிழர்கள் இயற்கையோடு ஒன்றித்த வாழ்க்கை வாழ்ந்தனர். இயற்கையில் தாம் கண்டவை, அஞ்சியவை , தம் குடி வீரர்களை தம் குலக் கடவுளர்களாய் ஏற்று வழிபட்டனர். பழந்தமிழ் இலக்கியங்களை அடிப்படையாய்க் கொண்டு இக்கட்டுரை தமிழர்களின் வழிபாட்டு முறைகளில் ஒன்றான வேலன் வெறியாடலை ஆராய முற்படுகிறது.

கடவுளர்களை போற்றி புகழ்வதன் மூலம் இறை அனுக்கிரகம் பெறலாம் என்ற நம்பிக்கை ஆரம்ப காலம் முதல் இருந்ததை " வழிபடு தெய்வம் நிற்புறங்காப்ப........" என்ற தொல்காப்பிய சூத்திரம் மூலம் அறியலாம்.

சங்கத்தமிழர் வாழ்வியல் நிலங்களை அடிப்படையாகக் கொண்டு கட்டமைக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு நிலத்திற்கும் என ஒவ்வொரு தெய்வங்கள் காணப்பட்டதை தொல்காப்பியத்தின் பொருளதிகார சூத்திரத்தின் மூலம் அறியலாம்.

" மாயோன் மேய  
காடுரையுலகமும்  
சேயோன் மேய வரையுலகமும்  
வேந்தன் மேய தீம்புனலுலகமும்  
வருணன் மேய பெருமணலுலகமும்  
முல்லை குறிஞ்சி மருத நெய்தலெனச்  
சொல்லிய முறையார் சொல்லவும்....."

என்கிறது அந்தச் சூத்திரம். இதன்படி குறிஞ்சி நிலத்திற்கு முருகனும் முல்லை நிலத்திற்கு மாயோனும் மருத நிலத்திற்கு இந்திரனும் நெய்தல் நிலத்திற்கு வருணனும் கடவுளர்களாக குறிப்பிடப்படுகின்றனர். இவற்றை விட சிறுதெய்வ வழிபாடு, தாய்த்தெய்வ வழிபாடு இயற்கை வழிபாடுகளை அக் கால மக்கள் மேற்கொண்டிருந்ததைச் சங்க இலக்கியச் செய்யுள்கள் காட்டுகின்றது. ஆதித் தமிழர்களின் வழிபாட்டு முறைகளில் ஒன்றாக வெறியாடல் காணப்படுகின்றது. இன்றைய வழக்கத்தில் சொல்வதாயின்

வெறியாடுதலை கலை ஆடுதலுடன் ஓரளவு ஒப்பிடலாம். இன்று கிடைக்கின்ற முதல் இலக்கண நூலாகிய தொல்காப்பியத்திலும் வெறியாட்டு பற்றிய செய்திகள் காணப்படுகிறது.

"வெறியறி சிறப்பின் செவ்வாய் வேலன்
வெறியாட்ட யர்த்த காந்தளும்"

என்கிறது பொருளதிகார அறுபதாவது சூத்திரம்.

இந்த வெறியாட்டு அதிகம் முருகனுக்கே நிகழ்த்தப்பட்டதாக சங்க இலக்கியங்கள் பதிவு செய்கிறது.துன்பங்களை முருகனே தருவதாகவும் அவனை வழிபடுவதன் மூலம் அத்துன்பங்களை களையலாம் என வேலன் வெறியாடல் இடம் பெறுவதாக மதுரை காஞ்சி குறிப்பிடுகின்றது

இந்த வெறியாட்டு தமிழ் நாடக வளர்ச்சியின் ஆரம்ப புள்ளியாக கருதப்படுகின்றது. ஓர் சடங்காக மேற்கொள்ளப்படும் வேலன் வெறியாடலில் சில நடைமுறைகள் பின்பற்றபடும் . தெய்வமேறி ஆடுபவன் கையில் வேல் ஒன்றை வைத்திருப்பான். முருகக் கடவுளின் புகழ் துதித்து வெறியாடப்படும். இதற்கென்று சடங்கு நிகழ்களம் ஒன்று காணப்படும். இதனை அகநானூற்றுப் பாடல் ஒன்றின் மூலம் அறியலாம்.

" களநன் கிழைத்து கண்ணிலும்......"

என்கிறது அப்பாடல். இந்தக் களங்கள் அமையும் இடங்களாக திருமுருகாற்றுப்படை காடு,காவு, துருத்தி, கடம்பமரம், மன்றம் என்பவற்றை குறிப்பிடுகிறது. மேலும் இக் களம் 64 கரும்புத்துண்டுகளாக பிரிக்கப்பட்டு இருந்ததாகவும் திருமுருகாற்றுப்படை குறிப்பிடுகின்றது.

இந்த வெறியாட்டு சடங்கு ஓர் உளப்படுத்தல் நோக்கில் மேற்கொள்ளப்பட்டது.தலைவி தீராத காதல் நோயால் வாடுகின்ற போது அவள் நிலைகண்டு துயருற்ற செவிலித்தாய் அவள் துயர் களைவதாய் முருகனை வேண்டி வெறியாட்டு மேற்கொள்ள அழைத்து செல்வதாக சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.உண்மை காரணத்தை அறிந்த தோழி தலைவனை விரைந்து வேண்டுவதாகவும் சங்க இலக்கியங்கள் பதிவு செய்கின்றன.

வெறியாட்டின் முக்கிய நிகழ்வாய் பலியிடல் காணப்படும். சங்க இலக்கியங்களில் பலியிடல் பற்றிய விடயங்கள் நிறைந்து கிடக்கின்றது.வெறியாடலின் முக்கிய நிகழ்வாக பலியிடல் காணப்படும். குறுந்தொகைச் செய்யுள் ஒன்றில்

" வளநகர் சிலம்ப் பாடிப் பலி கொடுத்து
உருவச் செந்தினை குருதியொடுதூஉ
மறிக்குரல்
அறுத்த தினைப்பிரப்பு இரீஇ......"

எனக் குறிப்பிடப்படுகின்றது.
வெறியாடலின்போது முருகனுக்கு குருதி பிசைந்த தினைக்கதிர்களை படைத்ததாக செழுமையான கதிர்களை படைப்பதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

"கடியுண் கடவுட் கிட்ட செழுங்குதல்
அறியாதுண்ட மஞ்சையாடும் மகள்
வெளியுறவு வனப்பின் வெய்துற்று நடுங்கும்
......."

இங்கே வெறியாடப்படும் தன்மையும் செழுமையான தினைக் கதிர்களை இறைவனுக்குப் படைக்கின்ற மரபையும் இக்குறுந்தொகை செய்யுள் குறிப்பிடுகின்றது.

குறிஞ்சி நிலத் தெய்வம் முருகன். அவன் உறையும் நிலத்தில் வாழ்ந்தோர்கள் தம் துன்பங்களைக் களைவதற்காய் வெறியாடலை மேற்கொண்டனர். தெய்வமேறி ஆடுபவர் கையில் வேலை வைத்திருந்ததனால் வேலன் வெறியாட்டு எனப்பட்டது. இந்த வெறியாட்டு இரவிலே மேற்கொள்ளப்பட்டதாக "....முருகாற்றுப் பருத்த உருகெழு நடுநாள்......" என்ற அகநானூற்றுப் பாடல் மூலம் அறியலாம். இந்த வெறியாடல் ஒருபுறம் கூத்து மரபின் ஒரு தொடக்கப்புள்ளியாகவும் பலியிடல் மரபின் தன் இயல் மரபின் நீட்சியாக இன்றைய ஆலய வேள்விகளை குறிப்பிடலாம்.

கற்பனையாகவோ அல்லது உண்மையாகவோ உடலியல் ரீதியாகவோ அல்லது உளவியல் ரீதியாகவோ ஏற்படும் தாக்கங்களுக்கு சரியான முறையில் எதிர்ச்செயலைக் காட்ட முடியாத நிலையின் விளைவாகத் தோன்றும் தொடர்விளைவு மன அழுத்தம் எனக் கூறலாம். மன அழுத்தம் எனும் பதம் *Hans Selye* என்ற *endocrinologist* ஆல் எந்த ஒரு தாக்கத்திற்கும் தவறான ஒரு உடற்றொழியல் எதிர் விளைவு கொடுக்கப்படும் நிலையே மன அழுத்தம் என வரையறை செய்யப்பட்டது.





# மன உளைச்சல்

ஒரு மருத்துவபீட மாணவர் விடுதி.
அன்று விடுதியின் ஒரு அறையின் வாயிலை கடந்து செல்லும் போது துர்நாற்றம் வீசிக்கொண்டு இருக்கிறது. நேரம் ஆக ஆக விடுதி முழுதும் அது பரவிக் கொண்டு இருக்கிறது. *Warden* உதவியுடன் அந்த அறை திறக்கப்படுகிறது. அதிர்ச்சியில் உறைந்தவர்கள் அங்கே கயிற்றில் தொங்கிய நிலையில் வெளியே தள்ளப்பட்ட நாக்கும் இரத்தம் உறைந்த கால்களும் மொத்தமும்



தளர்ந்த உடலும் கொண்டு பிணமாய் கிடக்கும் மாணவனின் நிலை கண்டு உருக்குலைந்து போனார்கள். விசாரணைகள் தொடர வெளிவந்த உண்மை மன அழுத்தம் காரணமாய் மாணவன் தற்கொலை செய்து கொண்டார்.
இந்த மாணவன் மட்டுமல்ல இன்றைய சூழலில் அனைத்து துறைகளிலும் எல்லாப் பணிநிலைகளிலும் அனைவரும் ஒருவிதமான மன இறுக்கத்துடனேயே உழன்று கொண்டிருக்கின்றனர். மன அழுத்தத்தின் போது உடலில் டொப்பமைன்( *Dopamine*) , எபிநெஃரைன்( *Epinephrine*) மற்றும் நோர்எபிநெஃரைன்( *Norepinephrine*) போன்ற நியூரோ ரான்ஸ்மிட்டர்கள் ( *Neuro transmitters*) அதிகரிப்பதோடு அதிரினலின் ( *Adrenaline*) போன்ற ஸ்ரெஸ் (*Stress*) ஹோர்மோன்கள் (*hormones*) அதிகரித்து உடலை அதிகளவான நேரம் *stress* நிலையில் வைத்து தலைவலி மற்றும் எலும்பு, தசை வலிகளை உருவாக்கும்.

ஏமாற்றம், பயம், நிராகரிப்பு, எரிச்சல், அதிக வேலை, அதிக சிரத்தை, குழப்பம், மதுபோதை, புகைப்பிடித்தல் சில சமயம் சுகமான சுமை (திருமணம், பதவி உயர்வு) கூட மன அழுத்தத்தை உண்டாக்கலாம். 4ஆம் வருட இறுதிப் பரீட்சை எழுத முடியாமல் போன ஏமாற்றத்தினாலோ அல்லது குழப்பத்துடன் கூடிய பயத்தாலோ இம் மாணவன் தற்கொலை செய்திருக்கக் கூடும் என பல கதைகள் பல்கலைக்கழகம் எங்கும் உலாவிக்கொண்டிருந்தது. ஏதேனும் நோயோ வறுமையோ கடனோ நட்பு அல்லது உறவு முறிவோ என பல கேள்விகளும் மாணவரின் உளத்தில் எழுந்து கொண்டிருந்தது.

மருத்துவம் போற்றுதும்

கோபம், பதட்டம், மனச்சோர்வு போன்ற உளவியல் மாற்றங்களும் அமிலத்தன்மை, மலச்சிக்கல், நெஞ்செரிச்சல், முதுகுவலி, தலைவலி, களைப்பு, சோர்வு, உயர் இரத்த அழுத்தம் போன்ற உடலியல் மாற்றங்களும் மன அழுத்தத்தில் உள்ளவர்களிடம் அவதானிக்கக் கூடியதாக இருக்கும். இவ் அறிகுறிகள் அந் நபரினாலோ அல்லது அவரைச் சுற்றியுள்ள நெருக்கமானவர்களினாலோ இலகுவாக இனங்காண முடியும். தற்கொலையால் உயிரை இழந்த இம் மாணவன் இவ்வாறு பல அறிகுறிகளை வெளிக்காட்டிய போதிலும் தன்னைத் தானே தனிமைப்படுத்தி சுற்றியுள்ளவர்களால் இனங்காணப்படாமல் போய்விட்டாரோ என்னமோ.



தற்கொலைக்கு தள்ளப்பட்ட இம் மாணவன் சரியான நேரத்தில் சரியான நபர்களால் இனங்காணப்படிருப்பானேயானால் ஆதரவுக் குழுக்களினூடாகவோ சிறந்த ஆலோசனையின் ஊடாகவோ தளர்வு உத்திகள் ஊடாகவோ இலக்கை நிர்ணயம் செய்ய வைப்பதன் ஊடாகவோ ஒரு பொழுதைப்போக்க பின் தொடர்வதன் ஊடாகவோ சிறந்த உறக்கம் (7-8 மணித்தியாலங்கள்) மூலமோ மன அழுத்தத்திலிருந்து வெளிக்கொணரப்பட்டு இன்று தனது கல்வி நடவடிக்கையில் ஈடுபட்டிருக்க முடியும் என வருந்துபவர்கள் பலர்.

இவ்வாறான நிகழ்வுகள் மூலம் நாம் விளங்கிக் கொள்ள வேண்டியது யாதெனில் எம் சமூகத்தில் எம்மைச் சுற்றியுள்ள அனைவர்களிடமும் எம்மால் முடிந்தளவு அக்கறை கொண்டு மன அழுத்தத்தில் போராடுபவர்களை சரியாக வழிநடத்த வேண்டியது ஒவ்வொரு மருத்துவர்களினதும் கடைமை மட்டுமல்ல ஒவ்வொரு தனிநபரினதும் கடமை ஆகும்.

ஆகவே உறவுகளே ஒன்றை தெளிவாக புரிந்து கொள்வோம். சாதாரண கவலை வேறு .மன அழுத்தம் வேறு. சாதாரண கவலை ஒரு விதமான சாதாரண உணர்வு. ஆனால் மன அழுத்தம் என்பது ஒரு கொடிய வகையான நோய் போன்றது. எனவே நமது கடமை என்னவென்றால் மன அழுத்தத்திற்கு உள்ளாகி உள்ள ஒருவரை எம் செயல்பாடுகளால் மேலும் மன அழுத்ததிற்கு தள்ளாமல் அவர்களை வெளியே கொண்டுவர வேண்டும்.

இன்று மன அழுத்தமோ , மன உளைச்சலோ ஆன பலர் வைத்திய உதவிகளை கூட நாடுவதில்லை . ஏன் தெரியுமா?

1- மன அழுத்தம் என்பது நோய் என்று அவர்களிற்கு தெரியாது.

2-மன அழுத்ததிற்கு மருத்துவம் இருக்கிறது என தெரியாது.

3-மன அழுத்ததிற்காய் எல்லாம் வைத்திய சாலை சென்றால் எங்கே தன்னை மன நோயாளி என்று சொல்லிவிடுவார்களோ என்ற அச்சம்.

ஒன்றை சிந்துயுங்கள். உடலிலே மனம் என்ற ஒன்று எங்கே இருக்கிறது? உண்மையாக மூளையைத்தான் நாங்கள் மனம் என்கிறோம். ஆக மேலே குறிப்புட்டது போன்ற இரசாயனங்களின் சமனிலை அற்ற தன்மையால் மூளை ஒரு உணர்வை வெளிக்காட்டும். அதுவே மன அழுத்தமாய் மாறும். ஆகவே இதற்கு எல்லாம் மருத்துவங்கள் இருக்கிறது.

எனவே மன அழுத்தம் உடையோரிற்கு உதவுவது நம் ஒவ்வொருவரது கடமையாகும்.

ந. சிபிஷா.
3ஆம்வருடம்,
மருத்துவபீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(16.07.2020 – 31.07.2020) க்குரிய இதழில் வழுக்கியாறு என்பதற்கு பதில் வளுக்கியாறு என தவறாக பிரசுரிக்கப்பட்டிருந்தமைக்கு வருத்தங்களை தெரிவிப்பதோடு மன்னிக்க வேண்டுகிறோம்.

2



# வழுக்கியாறு

## சூழற்தொகுதியின் அமைப்பும் தொழிற்பாடும்

T.K.மகி

### வழுக்கியாறு வடிநிலத்தின் புவியியல் அமைப்பும் உருவாக்கமும்

இலங்கையில் வடக்கு முனைப்பகுதியாகத் திகழும் யாழ்ப்பாணக் குடாநாடானது சமதரையான தரைத்தோற்ற அமைப்பைக் கொண்டிருந்தாலும் சிறிதளவிலான மேடு பள்ளங்களைக் கொண்டு காணப்படுகிறது. யாழ்ப்பாணக்குடாநாடானது புவியியல் ரீதியாகவும் நிர்வாக ரீதியாகவும் பிரதானமாக நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவையாவன வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் மற்றும் தீவகம் என்பவையாகும். இங்கு தீவகமானது குடாநாட்டிற்கு மேற்குப்புறமாக உள்ளதுடன் பல சிறிய தீவுக்கூட்டங்களைக் கொண்டு காணப்படுகிறது.


வழுக்கியாறானது குடாநாட்டில் ஓடும் ஒரேயொரு ஆறு என்பதுடன் இது வலிகாமப்பகுதியை ஊடறுத்து காணப்படுகிறது. வலிகாமத்தின் வடபகுதி உயர்ந்தும் தென் மேற்குப்பகுதிகள் தாழ்ந்தும் ஒரு ஓடை போன்ற அமைப்பை உருவாக்குவது வழுக்கியாறு என்னும் பருவகால ஆற்றினது உற்பத்திக்கு வாய்ப்பாகக் காணப்படுகிறது. வழுக்கியாறு வடிநிலமானது வலிகாமத்தின் மத்திய பகுதியில் சுமார் 57 சதுர கிலோமீற்றர் பரப்பளவை உள்ளடக்கி காணப்படுகிறது. இப்பிரதேசமானது யாழ்ப்பாணத்திலுள்ள நான்கு பிரதேசசெயலர் பிரிவை உள்ளடக்குகின்றன. அவையாவன வலகாமம் வடக்கு (தெல்லிப்பழை), வலிகாமம் தெற்கு (உடுவில்), வலிகாமம் தென்மேற்கு (சண்டிலிப்பாய்) மற்றும் வலிகாமம் மேற்கு (சங்கானை) என்பவையாகும். வழுக்கியாறானது பிரதான வாய்க்காலுடன் எட்டு துணை வாய்க்கால்களையும் 65 சிறிய குளங்களையும் பல நீர் வழங்கு வாய்க்கால்களையும் கொண்டு காணப்படுகிறது. வழுக்கியாறானது தெல்லிப்பழை பிரதேசசெயலர் பிரிவிலுள்ள குரும்பசிட்டி கிராமத்தில் ஆரம்பமாகி சங்கானை பிரதேசசெயலர் பிரிவில் உள்ளடங்கும் அராலிப்பகுதியில் உள்ள பறாச் (Barrage) மூலமாக கடலுடன் கலக்கின்றது. (பறாச் எனப்படுவது கடல் நீர் உட்புகுவதை தடுப்பதற்கான தடுப்பணை ஆகும்) வழுக்கியாறின் பிரதான வாய்க்காலின் மொத்த நீளம் 16.01km ஆகும்.

நிலத்தடி நீரானது இப்பகுதியில் காணப்படும் பெறுமதி மிக்க இயற்கை வளமாகும்.



இவ்வளத்தைப் பேணுவதில் வழுக்கியாறானது பெரும்பங்கு வகிக்கின்றது. அதாவது மழை வெள்ள நீரை சேமித்து அதனை நிலத்தடி நீருக்குள் மீள்நிரப்புவதற்கு வழுக்கியாற்று குளத்தொடரானது (Cascade) பெரும்பங்கு வகிக்கின்றது. (குளத்தொடர் - குளங்கள் வாய்க்கால்கள் ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்டு காணப்படுவதனை குளத்தொடர் அல்லது குள அருவித்தொடர் என அழைக்கப்படும்)

வருட மழைவீழ்ச்சியின் 12% - 69% ஆன நீர் 37%Md நிலத்தடி நீரை மீள்நிரப்புவதில் பயன்படுகின்றது. இவ்வாறு மீள் நிரப்பப்படும் நிலத்தடி நீரானது மக்களால் உருவாக்கப்பட்ட கிணறுகள் மூலமாக பல்வேறு தேவைகளின் பொருட்டு மீளப்பெறப்பட்டு பயன்படுத்தப்படுகின்றது.




இன்றைய காலத்தில் இந்நிலத்தடி நீரானது மனிதனின் தூரநோக்கற்ற நீர்ப் பாவனையாலும் மாசாக்க நடவடிக்கைகளாலும் பெரும் பாதிப்பிற்குள்ளாகின்றது. அளவுக்கதிகமான நீர்ப்பாசனம், அளவுக்கதிகமான விவசாய இரசாயனப்பாவனை, பிளாஸ்டிக் மற்றும் உக்கலடையாத பொருட்களின் அதிகரித்த பாவனையும் சூழலுடனான தொடுகையும் குறித்த சூழல் மாசாக்கத்தில் பெரும் பங்குவகிக்கின்றன. குடாநாட்டு நிலத்தடி நீரானது $Ca\text{-}Mg\text{-}Cl\text{-}SO_4^{2-}$ மற்றும் $Na\text{-}Cl\text{-}SO_4^{2-}$ அயன்களை பெருமளவில் கொண்டுள்ளது. இவ் அயன்கள் நீரின் நிரந்தர வன்மைக்கும் உவர் தன்மைக்கும் காரணமாகின்றன. ஆனால் இன்று வரை இந்நீரானது விவசாயம் மற்றும் வீட்டுத்தேவைகளுக்கு பயன்படுத்தத்தக்க வகையில் அமைவதுடன் பயன்படுத்தப்பட்டும் வருகின்றது.

வலிகாமத்தின் ஆழமான பகுதியானது சுண்ணாம்புக்கல் பாறைகளால் ஆக்கப்பட்டுள்ளது. இச்சுண்ணாம்புக்கல் படையானது 100 – 150அ தடிப்பைக் கொண்டது. இச்சுண்ணாம்புக்கல் பாறை அமைப்பும் அதனுடன் தொடர்புடைய மண் இழையமைப்பும் வழுக்கியாற்று வடிநிலத்தொகுதியின் இயக்கத்திற்கு வாய்ப்பாக அமைகின்றது. சுண்ணாம்புப் பாறைப்படுக்கையில் மூன்று வகையான சுண்ணாம்புப்பாறைகளை இனங்காண முடியும். அவையாவன முருகைக்கல் அடங்கிய சுண்ணாம்புப்பாறை (ஊழசயடடைநெ டதைநளவழநெ)இ மணல் தன்மையான சுண்ணாம்புப்பாறை(மக்கி) (ளுயனெல டதைநளவழநெ)இ வன்மையான சுண்ணாம்புப்பாறை (ர்யசன உாநசவல டதைநளவழநெ) என்பனவாகும்.

இவற்றில் வன்மையான சுண்ணாம்புப்பாறை படுக்கையானது நீரைப்புகவிடும் தன்மை மிக மிக குறைவானது. எனவே ஊடுருவும் நீரானது தாய்ப்பாறை மேலே தேக்கி வைத்திருக்கப்படுகின்றது. அத்துடன் இவ்வன்பாறைப் படுக்கையானது நிலக்கீழ்ப்பாறை சுரங்க வழிகளைக் கொண்டு காணப்படுகிறது. இவை நீரின் நிலத்தடி நீரோட்டத்திற்கு பயன்படுகின்றது.

பல வருடங்களாக மழைநீர் சுண்ணாம்புப்பாறையுடன் இரசாயன ரீதியில் தாக்கமடைவதால் பாறைகள் அரிப்படைந்து குளங்கள் சுரங்கங்கள் போன்ற அமைப்புக்கள் வழுக்கியாறு வடிநிலத்தில் உருவாகின. இவற்றை வலிகாமம் வாழ் ஆதிமக்கள் பொருத்தமான முறையில் வினைத்திறன் மிக்க நீரநிலைகளாகவும் விளைநிலங்களாகவும் அமைத்து இதன் இரு பக்கங்களிலும் குடியேறினார்கள். நீர்நிலைகள் மூலம் சேமித்த நீரை தமது




அன்றாட தேவைகளுக்காகவும் விவசாயத்திற்கும் பயன்படுத்தினார்கள்.

எழுத்துருவ ஆவணங்களில் வழுக்கை ஆறு என குறிப்பிட்ட போதிலும் மக்களின் பேச்சுமொழியில் வழுக்கியாறு என்ற சொல்லே பரவலாக பாவிக்கப்படுகின்றது. இதற்கான காரணமாக நீர் வழுக்கி ஓடும் ஆறு என்ற பொருள்பட அழைப்பதாக கிராம மக்கள் விளக்கமளிக்கிறார்கள். இதனால் சரி, பிழை என்பதை தாண்டி மக்களால் வழங்கப்படும் பேச்சு நடை காரணப் பெயரையே நானும் எனது எழுத்தாக்கத்தில் பயன்படுத்துகிறேன்.

வழுக்கியாறானது கோடைகால மாதங்களான பங்குனி, சித்திரை, ஆனி, ஆடி போன்ற மாதங்களில் முற்றாக வரண்டும் வைகாசி, ஆவணி மாதங்களில் பெரும்பாலும் வரண்டும் காணப்படுகின்றது. ஏறக்குறைய 37 கிராமங்களைச் சேர்ந்த 21241 குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் வழுக்கியாறு வடிநிலத்தில் காணப்படும் குளத்தொகுதி மூலமும் அதனுடன் தொடர்புடைய சூழல்தொகுதி மூலமும் பயனடைகின்றனர். இவற்றுள் விவசாய நீர்ப்பாசனம் மற்றும் வீட்டுத்தேவைகளுக்குப் பயன்படும் நீர் பெறப்படும் மூலமாகவும் விளங்குவது முக்கிய அம்சமாகும். விவசாயமானது இப்பகுதி மக்களில் பெரும்பான்மையானவர்களின் முழுநேர அல்லது பகுதி நேர வாழ்வாதாரமாகும். மிகவும் வேறுபட்ட நிலப்பாவனைத் தன்மையை குறித்த வடிநிலமானது கொண்டு காணப்படுகிறது. அவையாவன நெல்வயல் நிலங்கள்இ விவசாய மேட்டு நிலங்கள்இ மக்கள் குடியிருப்புகள் நீர்நிலைகள் மற்றும் தரிசுநிலங்களும் பற்றைகளுமாகும். சாதி அமைப்பானது நலிவடைந்தாலும் இப்பகுதியில் பின்பற்றப்படுவதுடன் தொழில்ரீதியாக வினைத்திறன் வாய்ந்தவர்களாக சுயதொழில்களை மேற்கொள்கின்றனர். விவசாய நிலச்சுவாந்தர்கள் விவசாயக்கூலிகள் விவசாய சம்பந்தமற்ற தொழிலாளர்கள் ஆகியோர் பிரதான சமூக குழுக்களாக அவர்களின் வாழ்வாதாரத்தை அடிப்படையாகக் கொண்டு இன்றைய யாழ்ப்பாண சமூகத்தில் இனங்காணப்படுகின்றனர்.

ஆறு ஓடும்...

*உசாத்துணைகள்*

1. Sitrampalam, S. K. (1993). Yalppanam Thonmai Varalaru.
2. Sivashanmugarajah,S. (2013). Kaalaththi Ventru Nitkum Kantharodai.
3. Sutharsiny A, Pathmarajah S, Thushyanthy M, Meththinka V, (2012). Characterization of Irrigation Water Quality of Chunnakam Aquifer in Jaffna Peninsula.
4. Visnuvarthanan, N. Sivakumar, S.S. (2014). Cultivating Productive Water in Valukai Aru Catchment in Valikamam Division of Jaffna District of Northern Sri Lanka.
5. Rajesweran, S. T. B. (2001). Formation of Jaffna Peninsula and adjoining Islands.

# தகவலறியும் உரிமைச் சட்டம்

சி.விதுர்ஷன்.
அரசியல் விஞ்ஞானத்துறை
பேராதனை பல்கலைக்கழகம்

## அறிமுகம்

தனிநபருக்கு இலங்கையின் பொது அதிகாரசபைகளில் உள்ள தகவல்களை அறிந்து கொள்வதற்கான அடிப்படை உரிமையை வழங்குகின்ற சட்டம் இதுவாகும். இலங்கையின் பொது அதிகாரசபைகள் தன்னகத்தே கொண்டுள்ள பல்வேறு தகவல்கள் தொடர்பிலும் அறிந்துகொள்வதற்கான உரிமை மக்களுக்கு உள்ளது. ஆனால், எத்தகைய தகவல்களை, எத்தகைய செயல்முறை மூலம் மக்கள் பெற்றுகொள்வது என்பது தொடர்பில் பொதுவான செயன்முறையை அமுலாக்குவதன் மூலம், மக்கள் இலகுவாக தகவல்களைக் கையாள இந்த சட்டமானது நடைமுறைபடுத்தப்படுகிறது. தகவல் என்பது பதிவேடுகள், ஆவணங்கள், குறிப்புகள், மின்அஞ்சல்கள், அபிப்பிராயங்கள், மதியுரைகள், பத்திரிகை வெளியீடுகள், சுற்றுநிருபங்கள், கட்டளைகள், சம்பவத்திரட்டுக்கள், ஒப்பந்தங்கள், அறிக்கைகள், பத்திரிகைகள், மாதிரிகள், உருப்படிவம், கடிதத் தொடர்பு, குறிப்பறிக்கை, விரைவுச்சட்டவாக்கம், புத்தகம், திட்டவரைபு, வரைவு, வரைபடம், பட அல்லது வரைபட வேலை, புகைப்படம், திரைப்படம், குறும்படம், ஒலிப்பதிவு, ஒளிநாடா, இயந்திரம் மூலம் வாசிக்கக்கூடிய பதிவுகள், கணணிப்பதிவுகள் மற்றும் வேறு ஆவண பொருள், உள்ளடங்கலாக அதனது பௌதீக படிவம் அல்லது ஏதேனும் படிவத்திலான பொருள் அதன் ஏதேனும் பிரதி என்பவற்றை உள்ளடக்குகின்றது.




இந்த தகவல்களில் மக்களின் பொதுநலனை பாதிக்ககூடிய தகவல் என தகவல் வழங்கும் அதிகாரியினால் அல்லது அரசினால் தீர்மானிக்கப்பட்டவை, அரசின் பாதுகாப்பு மற்றும் நலன்களை பாதிக்க கூடிய தகவல்கள், அரச கொள்கைகளின் இரகசியத்தன்மையை கேள்விக்குள்ளாக்கும் தகவல்கள், ஏதேனும் தனிநபரை பாதிக்க செய்யும் தகவல் மற்றும் நாடுகளுக்கிடையிலான உறவுமுறையில் பாதிப்பை ஏற்படுத்தகூடிய தகவல்கள், நீதித்துறையினை பாதிக்கக்கூடிய தகவல்கள் போன்றவை தவிர்த்து ஏனைய தகவல்களை பெற்றுக்கொள்ள முடியும், தொழில் வாய்ப்புக்கள் வழங்கப்படுவதற்கான அடிப்படைகள், நேர்முகப் பரீட்சைகளின் புள்ளிகள், பாடசாலை அனுமதி மறுப்புக்கான காரணங்கள், அலுவலகங்களின் உள்ளக செயற்பாடுகள் போன்ற ஏனைய விடயங்களையும் அறியலாம்.


## சர்வதேச நாடுகளில் தகவலறியும் உரிமைச் சட்டத்தின் வளர்ச்சி

தகவலறியும் உரிமைச் சட்டமானது இலங்கைக்கு புதிய ஒன்றாக இருந்தாலும், 250 வருடங்களுக்கு முன்னர் முதன் முதலில் சுவீடன் நாட்டின் பிரஜைகள் தகவலறியும் உரிமையை அனுபவிக்க வழி ஏற்படுத்தப்பட்டது. அந்நாடு 1766 ஆம் ஆண்டில் பத்திரிகைச் சுதந்திரச் சட்டத்தை நிறைவேற்றி தகவலறியும் உரிமையானது மக்களின் அடிப்படை உரிமை என உலகிற்கு எடுத்துக் கூறியது. தொடர்ந்து 1966 ஆம் ஆண்டு ஐக்கிய அமெரிக்கா தகவலறியும் உரிமையை சட்டத்தின் மூலம் உறுதிப்படுத்திய பின்னர் 1976 ஆம் ஆண்டில் மெக்ஸிகோ நாட்டில் நடைபெற்ற தகவல் பரிமாற்றம் தொடர்பான மாநாட்டில், தகவலறியும் உரிமையானது பிரஜைகளின் சமூக உரிமை எனச் சுட்டிக்காட்டப்பட்டது. இதனைத் தொடர்ந்து பல்வேறு நாடுகளும் தகவலறியும் உரிமையை தங்களது சட்டவாக்கங்களில் சேர்த்துக்கொள்ள

ஆரம்பித்தன. சார்க் பிராந்தியத்திலுள்ள இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேசம், மாலைதீவு, நேபாளம், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளும் தகவலறியும் சட்டத்தினை கடைப்பிடிகின்றன. இந்தியாவில் 2005 ஆம் ஆண்டு இந்திய அரசியல் அமைப்பின் 22 ஆவது பிரிவுக்கு திருத்தம் கொண்டுவரப்பட்டதன் மூலம் தகவல் அறியும் உரிமை அந்நாட்டு மக்களுக்கான அடிப்படை உரிமையாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றது.

## இலங்கையில் தகவலறியும் உரிமைச் சட்டத்தின் வரலாறு

தகவலறியும் உரிமை சட்டத்தின் அவசியம் 1994 ஆம் ஆண்டில் இலங்கையில் உணரப்பட்டது. இதனடிப்படையில் சு.மு.று. குணசேகர தலைமையில் அமைக்கப்பட்ட குழு தகவலறியும் சட்டத்திற்கான சிபாரிசுகளை முன்வைத்தது. இதனைத்




தொடர்ந்து 1996 ஆம் ஆண்டில் தகவலறியும் சுதந்திர சட்டமூல வரைபினை இலங்கை சட்ட ஆணைக்குழு சமர்ப்பித்தது. இந்த வரைபானது பரவலாக விநியோகிக்கப்பட்டிருந்தாலும், பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படவேயில்லை. தொடர்ந்து 1997 இலும், 2002 இலும் சந்திரிக்கா தலைமையிலான பொதுஜன ஐக்கிய முண்ணனி அரசாங்கம் முன்வைத்த அரசியல் தீர்வுத் திட்ட வரைபுகளிலும் தகவலறியும் உரிமையானது, அடிப்படை உரிமையாக உள்ளடக்கப்பட்டிருந்தது.

2002 ஆம் ஆண்டில், தகவலறியும் சுதந்திர சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கு இரு





கட்சிகள் சார்ந்த முயற்சி முன்னெடுக்கப்பட்டது. மேலும், ஊடகங்களும், சிவில் சமூக நிறுவனங்களும் அரசாங்கத்துடன் இணைந்து சட்டமூல வரைபுக்கும், வடிவமைப்புக்கும் உதவின. இந்த செயற்பாடு தகவலறியும் சட்டமூல வரைபுநகலிற்கு வழிகோலியதுடன், 2004 பெப்ரவரியில் அப்போதைய பிரதமர் ரணில் விக்ரமசிங்க அவர்களால் தகவல் அறியும் சட்டமூல வரைவு அமைச்சரவையில் சமர்பிக்கப்பட்டு அனுமதி பெறப்பட்டது. இருப்பினும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு முன் 2004 மார்ச் மாதம் பாராளுமன்றம் கலைந்தது. இதன் காரணமாக இந்த சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை.

2010ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில், எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கரு ஜயசூரிய அவர்கள் 2003 ஆம் ஆண்டின் தகவலறியும் சட்டமூல வரைபினை தனிநபர் பிரேரணையாக, பாராளுமன்றில் சமர்ப்பித்தார். ஆறு மாதங்களுக்குள், தகவலறியும் சட்டமூலமொன்றை அரசாங்கம் சமர்ப்பிக்கவிருப்பதாக அப்போது ஆளும் கட்சிக் கொறடாவாக இருந்த தினேஸ்



குணவர்தன தெரிவித்ததையடுத்து, கரு ஜயசூரிய, தமது சட்டமூலத்தை வாபஸ் பெற்றார். ஆனாலும் இது சார்ந்த சட்ட முயற்சிகள் எதுவும் முன்வைக்கப்படாமையால், 2011 ஆம் ஆண்டு யூன் மாதத்தில் கரு ஜயசூரிய பாராளுமன்றத்தில் மீண்டும் சட்டமூலத்தை முன்வைத்தார். எவ்வாறாயினும், அது அரசினால் தோற்கடிக்கப்பட்டது. 97 உறுப்பினர்கள் சட்ட மூலத்திற்கு எதிராகவும், 34 உறுப்பினர்கள் ஆதரவாகவும் வாக்களித்தனர்.



இறுதியாக தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் தனது 100 நாள் வேலைத்திட்ட வாக்குறுதிகளில் ஒன்றாக தகவலறியும் சட்ட இயற்றலைக் குறிப்பிட்டிருந்தார். இதன் பின்னணியில் 2015 ஏப்ரல் 28 ஆம் திகதி, 19 வது திருத்தச் சட்டம் இயற்றப்பட்டது. இதில் அரசியலமைப்பின் உறுப்புரை 14(அ) இல் தகவலறியும் உரிமையானது பிரஜைகளுக்கான அடிப்படை உரிமைகளில் ஒன்றாகச் சேர்க்கப்பட்டது. உறுப்புரை 14(அ) இன் கீழ், சட்டத்தினால் அளிக்கப்பட்டவாறே இந்த உரிமை அமுலாக்கப்படக் கூடியதாகும். எனவே, தகவலறியும் உரிமை சட்டம் இல்லாத நிலையில், தகவலறியும் உரிமை தொடர்பான அரசியலமைப்பு ஏற்பாடு பயனற்றதாகவே இருந்தது. எனவே தான் 2016 மார்ச் 4 இல், பாராளுமன்றத்தினால் தகவலறியும் உரிமைச் சட்டம் இயற்றப்பட்டதுடன், 2016 ஆகஸ்ட் 4 ஆம் திகதி சபாநாயகர் ஒப்பமிட்டதன் மூலம் அது சட்டமாக மாறியது. அதன்பின் 2018ஆம் ஆண்டின் உலக தகவலறியும் உரிமைச் சட்ட தரவரிசை பட்டியலில் இலங்கைக்கு 4ஆம் இடம் கிடைத்தது. இது இச் சட்டத்திற்கு கிடைத்த வெற்றியாகும்.

## குறுக்கெழுத்துப்போட்டி – 02

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 கொ | க் | 2 க | ட் | 3 டி | ச் | 4 சோ | 5 லை |
| ன் | | ய | | ப | | 6 ம் | ஓ |
| 7 றை | 8 க | ல் | ல | | 9 சி | ப | |
| 10 வே | ல் | | | 11 க | ன | ல் | |
| 12 ந் | வி | 13 தை | | 14 நா | ம் | | 15 ர் |
| த | | 16 ய | 17 கா | ம் | | 18 ஏ | ணீ |
| 19 ன் | 20 ஜ | ல் | ன | | | 21 க | ண் |
| | தி | | 22 ம் | ல | ன | ன் | த |

### பரிசுக்குரியவர்

ச. நிலானி
ஆண்டு 6
கொக்குவில் இந்துக் கல்லூரி

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | 5 | 6 | |
| 7 | | | | | 8 | | 9 |
| | | 10 | | 11 | | | |
| | | | | | | 12 | |
| 13 | 14 | | 15 | | | | |
| 16 | | | 17 | 18 | 19 | | |
| 20 | | 21 | | | | | |
| | | 22 | | | | | |




## இடமிருந்து வலம்

*1- உமறுப்புலவர் எழுதியது*
*7- புவியினைக் குறிக்கும் (குழம்பி)*
*8- ஒரு நோய் (திரும்பி)*
*10- தீங்கு நேரப்போவதை முன்கூட்டியே அறிவிப்பது இது என கூறுகிறார்கள்.(குழம்பி)*
*12- சீதை ஆசை கொண்ட விலங்கு ( திரும்பி)*
*13- உறவு ( குழம்பி)*
*16- இது பெண்ணிற்கு வேலியாம்*
*17- ராட்சசன் என்றும் சொல்லலாம் (குழம்பி)*
*20- பூவில் இருப்பது*
*22- நரியின் திறமை ( குழம்பி)*

## மேலிருந்து கீழ்

*1- தமிழ் ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்று*
*2- தூது போகும் பறவை ஒன்று (தலைகீழ்)*
*3- கனவு (குழம்பி)*
*4- வில்லிலிருந்து பறப்படுவது (தலைகீழ்)*
*5- குலத்தளவே ஆகுமாம் இது என்கிறார் ஔவை (குழம்பி)*
*6- வேகமாய் துளைத்துச் செல்வது (குழம்பி)*
*9- நெறி என்றும் சொல்லலாம் (குழம்பி)*
*11- அன்பான தோழியைக் குறிக்கும்*
*14- வாழை இனம் ஒன்று*
*15- முடிவு (குழம்பி)*
*18- அரசனின் வாகனம்*
*19- கையினைக் குறிக்கும் (குழம்பி)*
*21- மன்மதன் மனைவி*

**அனுப்ப வேண்டிய.......**
**மின்னஞ்சல் முகவரி :~** thumi2016@gmail.com
**இறுதித்திகதி :~ 27.07.2020**




அருந்ததி

2014 ஆம் ஆண்டு முதல் 800 இற்கு மேற்பட்ட திருமணங்களை வெற்றிகரமாக நடத்திய அருந்ததி இணைய திருமண சேவை.

3000 இற்கு மேற்பட்ட வரன்களில் இருந்து உங்களுக்கு பொருத்தமானவரை தெரிவு செய்யுங்கள்.

www.arunthathee.com

Arunthathee (Pvt) Ltd
+947 77 164 524

18, Ramakrishna Avenue, Colombo 06. | 20 K.K.S Road Kokuvil, Jaffna.

**ஜீவா ஷஜீவனின்**

# சிங்ககிரித்தலைவன்

**ஆட்சி 06**

***லீலாதேவி***

குளிர்ச்சியான மகாவலி ஆறு....
சூரியன் ஆற்றிலே சங்கமமாகத் தயாராகிக் கொண்டிருக்கிறான்...
மாலை பிறந்தது... புது மயக்கம் தந்தது...
தூரத்தில் இருந்து ஒரு இனிய புல்லாங்குழலின் ஓசை மனதை மயக்கியது!
காட்டு மான்கள் தம் புதர் தேடி நகர்ந்தன...
பறவைகள் தமக்குத் தெரிந்த மொழிகளால், பகலை அனுப்பி வைக்க இனிய கீதங்கள் பாடின...
மாவலி ஆற்று நீர் சிவந்து ஜாலமிட்டது...
மாலை என்னும் பொழுதிலும் அந்தக் குழல் இசையிலும் திக்கய கிராமம் மூழ்கியிருந்தது!

மகாவலி ஆற்றில் மீன் பிடிப்பதற்காக ஆற்றங் கரையில் இருந்து ஊடறுத்து பெரிய கருங்காலி மரங்கள் இட்டு சிறிய துறை ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. நால்வர் மட்டுமே ஒரே நேரத்தில் பயணிக்கும் அளவு வரையறுக்கப்பட்ட மிகச்சிறிய துறை அது. அந்த துறையை நெருங்க...நெருங்க... அந்த இனிய ஓசை எம்மை நெருங்குகிறதே...

அந்த மாலையில் அந்தத் துறையில், தனிமையில் அமர்ந்திருந்து குழலிசைப்பது வேறுயாருமல்ல.... காசியப்பன் தான்!
அவனது நிழல் அவன் பின்னால் நீண்டு அந்த முல்லைக் கொடியைத் தொடும் வரை அவன் இசைத்த வண்ணம் இருந்தான்!



மென்மையான கையொன்று அவன் தோளில் தொடும் கணம் வரை, தன் எண்ணங்களையும் இனிய குழலிசையையும் மகாவலி ஆற்றின் வேகத்துடன் ஓடவிட்டிருக்க வேண்டும்... அவன் சிந்தனையாற்றையும் இசையின் ஓட்டத்தையும் அணை போட்டுத் தடுத்தது அந்தக் கை!

திரும்பிப் பார்த்தான்...
அழகின் மொத்த உருவமாக, ஒருத்தி!

மாலை நேரத்து வானின் நிறமாகத் தகதகத்த பொன்மேனி!
வடபுலத்து அமைந்த ஆனையிறவாகச் சிறுத்த இடை!
பேதுரு மலைச் சிகரங்களாக மார்பகங்கள்!
நீண்ட கழுத்து...
அழகிய வதனக் கடலில் இரண்டு கயல்களாய் கண்கள்...
காண்போரைக் காமுறச் செய்யும் சிவந்த இதழ்கள்...
இந்த மகாவலி ஆறு கருமையாக பாய்ந்தோடி வந்து வீழ்ச்சியானால் எப்படி இருக்குமோ, அப்படி இருந்தது கூந்தல்!

அவளது கைகளை எட்டிப் பிடித்து இழுத்து தன்னோடு அமர வைக்கத்தான் காசியப்பனுக்கு ஆசை...
எனினும் அவள் அவ்வூர் தலைவனின் மருமகள் லீலாதேவி!

"என்ன... அப்படிப் பார்க்கிறீர்கள்! நீங்கள் இங்கு வந்து இரு பௌர்ணமிகள் கடந்துவிட்டன...எப்போது என்னைப் பார்த்தாலும் உங்கள் பார்வையை விலக்காமல் பார்க்கிறீர்களே... ஏன்? அது சரி இந்த வேளையில் இங்கென்ன இசைப்பணியோ?
வணிகரின் இசையில் லயித்துப்போனது திக்கய... கெடுத்துவிட்டேனே...." பொய்யாகச் சலித்துக்கொண்டாள்!

"அடடா... நீ வந்தது முன்னமே

தெரிந்திருந்தால்... மறையும் சூரியனின் அழகை விடுத்து உன் அழகை ரசித்து இருப்பேனே... அது சரி இந்த வேளையில் நீ இங்கே என்ன செய்கின்றாய்?"

"இந்த ஆற்றங்கரையிலே மலர்ந்திருக்கும் மணம் மிகுந்த மல்லிகைப் பூக்களை எல்லாம் பறித்து பெரிய மாலை ஒன்றைத் தொடுத்து... அதை எங்கள் ஊருக்கு புதிதாக வந்திருக்கும் வணிகரிடம் காட்டி ஏதும் பரிசு பெறலாம் என்ற நோக்கத்தோடு வந்தேன்.... ஆனால் வணிகரோ... என்னை அளவு கடந்து வர்ணிப்பதை கண்டு உறைந்து போய் நிற்கின்றேன்.."

மல்லிகைப் பூக்களை போன்றே மணக்கின்ற தன் சொற்களை உதிர்த்தாள் லீலாதேவி!

" ஒரு ஆடவன் ஓர் அழகிய பெண் ஒருத்தியை அவ்வளவு அதிகமாக வர்ணிக்கின்றான் என்றால் அதன் அர்த்தம் உனக்கு புரியாதா லீலா?"

இப்போது அந்தப் பொற்சிலையின் வலக்கால் பெருவிரல் அரிந்து போடப்பட்டிருக்கின்ற கருங்காலி மரத்தில் ஏதோ எழுதியது....தலை குனிந்து கண்கள், காலை பார்த்தன... அதற்குத் தனங்கள் தடைப் போட்டன...!



"தேவி புரியவில்லையா உனக்கு...?" என்றவாறு எழுந்து வந்து அவளது கைகளைப் பற்றினான்!

அவளும் அவனை அன்போடு பார்த்தாள்! வெட்கத்தோடு அவன் பற்றிய கைகளைப் பார்த்தாள்...

கைகளில் இருந்த விரல்களுக்கிடையே மின்னிய மோதிரம் அவள் கண்களில் மின்னியது! அவனது கைகளை உதறி விட்டாள்! சற்றுப் பின்னே நகர்ந்து கைகளைப் பிசைந்த வண்ணம் நின்றாள்!

அவளது பார்வையின் விதத்தையும், எண்ணத்தையும் காசியப்பன் புரிந்து கொண்டான்! நேற்றைய நாள் அபஜராஜன் கொடுத்த அரசு முத்திரை பதித்த மோதிரத்தை தான் அணிந்திருந்ததையும் அதை கழற்ற மறந்து போனதையும் நினைவு படுத்திக் கொண்டான் காசியப்பன்!

தயங்கி நின்ற லீலாவை நெருங்கிப் போனான்... தன் கைகளைக் கட்டியவாறு பேசத் தொடங்கினான்!

" லீலா சில விடயங்களை எப்போதும் ரகசியமாகவே வைத்திருக்க முடியாது! அதுவும் என்னைப் பற்றிய ஒரு இரகசியத்தை

இனியும் உன்னிடம் மறைப்பதில் அர்த்தமில்லை!
நீயும் இந்த ஊரும் எண்ணிக்கொண்டிருப்பதைப் போல நான் வணிகன் அல்ல....
நான் இந்த நாட்டின் வேந்தன், நீதியற்ற மன்னன் தாதுசேனனின் மூத்த புதல்வன் காசியப்பன்!"
என்று சொல்லி முடிப்பதற்கு முன்பாகவே லீலாதேவி கூப்பிய கரங்களோடு முளந்தாளிட்டு காசியப்பனை வணங்கினாள்!
பொய்க் கோபம் கொண்டவனாய் காசியப்பன்,
" எழுந்திரு லீலா இந்தக் கிராமத்தில் என்று உன்னைப் பார்த்தேனோ அன்றே எனக்கு ஏற்ற துணைவியாக உன்னை தீர்மானித்துக் கொண்டேன். அதாவது இந்த தேசத்தின் வருங்கால அரசி நீயேதான்! எத்தனை துன்பங்கள் துயரங்கள் வந்தாலும், அவற்றை எல்லாம் வென்று இந்த நாட்டின் மன்னனாக நான் முடிசூடும் நல்ல நாளில் என் அருகில் நீ இருப்பாய்!"

அதிகாரமும் அன்பும் கலந்து வந்த இந்தச் சொற்களைக் கேட்ட லீலா இறுக்கமான காசியப்பனின் கைகள் பட்டு எழுந்து நின்றாள்!
உடலைக் காட்டிலும் உள்ளத்தில் அதிக நடுக்கம் வரப் பெற்றவளாய்,
" மரியாதைக்குரிய இளவரசே, நாங்கள் உங்களுக்கு கவனிப்பில் ஏதும் குறை வைத்திருந்தால் மன்னித்து அருளுங்கள்! நீங்கள் உயர்ந்த மன்னர் குலத்தைச் சேர்ந்தவர் நானோ.... சாதாரண கிராமத் தலைவனுடைய மருமகள் எப்படி....."
வார்த்தைகள் தடுமாறின...

" காதல் என்பது குலத்தையும் குடியையும் கொண்டு அமைவதில்லை... அது மனங்களை பொறுத்தது!"
என்று அவள் வார்த்தைகளை காசியப்பன் நிறைவு செய்து வைத்தான்!

இனி பேசுவதால் வேறு எந்த பயனும் இல்லை என்பதை லீலா உணர்ந்து நின்றாள்...

கவிழ்ந்திருந்த லீலாவின் நாடியை காசியப்பன் தன் விரல்களால் நிமிர்த்தினான்! அவள் கடை கண்களில் கண்ணீர் கசிந்திருந்தது!
அடுத்து காசியப்பன் அவளை இறுக அணைத்திருக்க வேண்டும்...
அப்படி அவர்கள் அணைத்துக் கொண்டால் கூட எவருக்கும் தெரிந்திருக்காது!
ஏனென்றால் இருள் கவிந்தது... முத்தமிடும் ஓசை மட்டும் மெல்ல எழுந்தது.

*விடியும்...*

உங்கள் விளம்பரங்களும் நமது தூமி மின்னிதழில் வெளியிடப்பட வேண்டுமா?

தொடர்பு கொள்ளுங்கள்

தூமி பல்சுவை மின்னிதழ்

thumi2016@gmail.com

www.facebook.com/Thumi06

# குடாநாட்டின் சுற்றுலாத்துறை அபிவிருத்திக்கான உபாயமுறைகள்

3

அதிரன்

யாழ்ப்பாணம் மந்திரிமனை

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பிரதான வீதியின் மேற்குப் புறத்தில் சட்டநாதர் கோயில் பகுதியில் அமைந்துள்ளது. யாழ்ப்பாணத்தை ஆண்ட மன்னர்கள் காலத்தில் மன்னனின் மந்திரி ஒருவருக்கு கட்டப்பட்டதாக சொல்லப்படும் இந்த மாளிகை தான் மந்திரிமனை என அழைக்கப்படுகின்றது.

ஆரம்பகாலங்களில் யாழ்பாணத்தை ஆண்ட தமிழ் மன்னர்கள் நல்லூர் நகரத்தினைத் தலைநகரமாகக் கொண்டு ஆட்சிசெய்த போது, இம்மனையானது கட்டப்பட்டுள்ளது என்பதனை அறியமுடிகின்றது. மந்திரி மனையின் கட்டிட அமைப்பு முறையானது முழுவதுமாக யாழ்ப்பாண அரச காலத்திற்குரியது எனக் கூறிவிட முடியாது என்பது ஆய்வாளர்களின் கருத்தாகக் காணப்படுவதனை நோக்க முடியும். சுதேச கலை மரபுகளும், தமிழரின் தொழில்நுட்பமும் சில இடங்களில் காணப்பட்டாலும் கட்டிடத்தின் முகப்பு தோற்றமானது, யாழ்ப்பாண அரசிற்குப் பின்னர் ஆதிக்கம் செலுத்திய ஐரோப்பிய கலை மரபுக்குரியவையாக காணப்படுகின்றன. மனையின் முகப்பில் வாசல் பகுதியை ஒட்டியவாறு இரண்டு பக்கங்களிலும் காணப்படும் கல்லிருக்கைகளானது இங்கு வருகை தருபவர்கள் வெளிப்புறத்தில் அமர்த்திருப்பதற்காக அக்காலத்து திண்ணை அமைக்கும் முறையில் அமைக்கப்பட்டவையாக இருக்கலாம் என்பது அதிகமானோரின் பொதுவான கருத்தாகக் காணப்படுகின்றது. இம்மந்திரிமனையின் சிறந்த வேலைப்பாடுடன் கூடிய பழங்காலத்து முறையில் செய்யப்பட்டுள்ள தரமான ஜன்னல்களும் கதவுகளும் காணப்படுகின்றன. இரண்டு மாடிகளைக் கொண்ட இக்கட்டிடத்தின் உயர்ந்த கூரையை தற்காலக் கூரை அமைப்பிலிருந்து முற்றிலும் வேறுபட்டு காற்றோட்ட வசதியுடன் தனித்துவமாக காட்டியுள்ளனர். பழங்காலத்து முறையில் செய்யப்பட்ட



தூண்கள், தமிழ் கல்வெட்டுக்கள், மற்றும் கருங்கல்லாலான வட்டத்தொட்டிகள் , கிணறுகள் எனச் சில தனித்துவமான கட்டிட அமைப்பு முறைகளையும் தன்னுள்ளே கொண்டுள்ள இக் கட்டிடத்தின் வெளிக்காட்டுமாணத் தோற்றமானது, ஐரோப்பியர் காலத்து கட்டிடக்கலை முறையைக் கொண்டிருந்தாலும் உயர்தர உள்வேலைப்பாடுகள் மொத்தமும் தமிழரின் திராவிட கட்டிடக்கலைக்குரிய அம்சங்களை வெளிப்படுத்தி நிற்கின்றன.

சமீபத்திய ஆராய்சியின் போது இம்மனைக்கு பின்புறத்தில் இருக்கும் ஓர் சரித்திரவியலாளர்கள் சிலர் கூறுகின்றனர். இக்கட்டிடமானது ஆரம்பகாலங்களில் பராமரிக்கப்பட்டு வந்தாலும், இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டு யுத்தத்தில் பெருமளவு பாதிக்கப்பட்டது. பின்னாட்களில் இதன் சரித்திர முக்கியத்துவம் கருதி 2003 ஆண்டின் காலப்பகுதியில் யாழ் மாவட்டச் செயலகம் இதற்கென நிதியை ஒதுக்கி, திருத்தப் பணிகளை மேற்கொள்ளும் வேலையை தனியார் நிறுவனமொன்றிடம் கையளித்திருக்கின்றது. தற்போது பராமரிப்புகள் ஏதுமின்றி தனித்த நிலையில் கண்டுகொள்ளப்படாத கட்டிடமாக ஒதுங்கி நிற்கும் இம்மந்திரிமனையானது,



அறையில் இருந்து சுரங்கவாசல் ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மேலும் இம் மந்திரிமனையின் பின்புறத்தில் நிலஅறை ஒன்றும் மண்டபம் ஒன்றும் இடிந்த நிலையில் இன்னமும் காணப்படுகின்றன. அப்போது நல்லூரினைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்துவந்த மன்னர்களிடமிருந்து போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியபின் நல்லூரிலிருந்து யாழ்ப்பாண நகருக்கு தலைநகரை மாற்றியமைத்துள்ளனர். இருப்பினும் நல்லூரில் எஞ்சியிருந்த அரச கட்டிடங்களும், நிலங்களும் போத்துக்கீசரின் அப்போதைய பல்வேறு தேவைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளன என்று யாழ்ப்பாணச் இலங்கையின் எஞ்சியுள்ள மிகச் சில புராதன அம்சங்களில் சுற்றுலாத்துறையில் முக்கியத்துவம் பெற்று வருகின்றது.

## யாழ்ப்பாணக் கோட்டை

யாழ்ப்பாணத்திலுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சுற்றுலாத்தளங்களில் முன்னிலையில் இருப்பது யாழ்ப்பாணக் கோட்டையே ஆகும்.

இலங்கை வரலாற்றில் நீண்டதொரு வரலாற்றின் நினைவுகளைச் சுமந்த வண்ணம் யாழ் நகரில் இருக்கும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடம் தான் யாழ்ப்பாணக் கோட்டை. இது உருவான

காலம் தொட்டு ஒவ்வொரு நூற்றாண்டிலும் முக்கியத்துவம் மிக்க தொன்மமாக யாழ்ப்பாணக் கோட்டை பரந்து கிடக்கின்றது என்று தான் கூறவேண்டும்.
யாழ்ப்பாண இராசதானியை கைப்பற்றிய போர்த்துக்கேயர்கள் யாழ்ப்பாணக் கோட்டையினை அமைக்கும் போது தற்போதுள்ளது போன்ற பாரிய கட்டமைப்பைக் கொண்டதாக இருக்கவில்லை. போர்த்துக்கேயரின் படைத்தளபதியாக இருந்த பிலிப்பே டி ஒலிவேரா அவர்களினால் 1618 ஆண்டில் யாழ்ப்பாணத்தில் இந்தக் கோட்டையைக் கட்டப்பட்டது.



ஒல்லாந்தத் தளபதியான வான் கொனெஸின் கட்டுப்பாட்டிற்குள் வந்த பின்னரே, யாழ்ப்பாணக் கோட்டை இன்று காணப்படும் ஐந்து முனை நட்சத்திரக் கட்டமைப்பைப் பெற்றது. ஒல்லாந்தர் யாழ்ப்பாணக் கோட்டையை, வடிவமைப்பின் மூலமும் கட்டுமானத்தின் மூலமும் மிகுந்த வலிமையானதாக உருவாக்கினார்கள். இதன், உள் அரண்களை முதலில் கட்டிய ஒல்லாந்தர்கள், வெளியரண்களை 18ஆம் நூற்றாண்டிலேயே கட்டினார்கள். இலங்கையின் இரண்டாவது பாரிய கோட்டையாக கருதப்படும் பெருமையை யாழ்ப்பாணக் கோட்டை பெற்றிருக்கின்றது.

## கந்தரோடை

யாழ்ப்பாண மாவட்டத்தின் வலிகாமப் பிரிவில், உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள ஒரு வரலாற்று முக்கியத்துவமுள்ள சுற்றுலா மையமாக வளர்ந்திருக்கின்ற இடம் தான் கந்தரோடை. யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள மிகப் பழைய குடியேற்றப் பகுதிகளில் முக்கியமானது. இலங்கையிலேயே நகராக்கம் இடம்பெற்ற மிகப் பழைய இடங்களில் ஒன்றாகவும் சொல்லப்படுகின்றது. தற்போது இது சிறிய ஊராக இருப்பினும் பழைய காலத்தில் யாழ்ப்பாணப் பகுதியின் தலைமையிடமாக இருந்ததாகக் கருதப்படுகிறது. அக்காலத்தில் கதிரமலை என அழைக்கப்பட்டதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

இவ்வூரில் செய்யப்பட்ட அகழ்வாய்வுகள் மூலம் பல பண்டைய கால சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கந்தரோடைக் குடியேற்றம் புத்தசமயக் காலத்துக்கும் முற்பட்டது என்பதையும் பெருங்கற்காலப் பண்பாட்டுக்கு உரிய சான்றுகள் இங்கு காணப்படுவதையும் ஆய்வுகள் காட்டுவதுடன், இப்பகுதியில் அகழ்வாய்வுகளில் கிடைத்த பொருள்கள் சில கிமு இரண்டாவது ஆயிரவாண்டைச் சேர்ந்தவை என்பதும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. .இலங்கையில் தமிழ் பௌத்தர்கள் வாழ்ந்தமைக்குரிய ஆதாரங்களில் முதன்மையானது தான் கந்தரோடை விகாரை.

இவ்வாறாக யாழ்ப்பாண மாவட்டத்தில் காணப்படும் வரலாற்று இடங்களைச் சுற்றுலாவின் மூலம் உச்சபட்ச வருமானம் ஈட்டுகின்ற இடங்களாக மாற்றுவதற்குரிய வேலைத்திட்டங்களைச் சுற்றுலா சார்ந்த செயற்படும் சகல அரசு மற்றும் அரசு சார்பற்ற நிறுவனற்களும் கிரமமாக நடைமுறைப்படுத்த முன்வரவேண்டும்.







ப்ரத்தியுஷாவும் ஆராதனாவும் இரு நாட்களிலேயே நெருங்கி விட்டிருந்தனர். ஆதியின் பகுதியில் வேலைசெய்பவர்களுடனும் ப்ரத்தியுஷா நெருங்கி இருந்தாள். அன்று ஆதி சற்று தாமதமாக வருவான் என்று அறிவித்து இருந்ததால் ப்ரத்தியுஷாவையே ஆதியின் அறையில் தேவையானவை இருக்கின்றதா என்பதை பார்த்து ஒழுங்கு படுத்தும் பொறுப்பை கவனிக்க சொல்லி இருந்தாள் ஆராதனா. கூறிய நேரத்தைவிட சற்று முன்னராகவே ஆதி வந்துவிட்டதால் ப்ரத்தியுஷா எவ் வாறு அவனது அறையை ஒழுங்கு படுத்தினாள் என்பதையே கவனிக்க ஆராதனாவால் முடியவில்லை.

ஆதி அவனது அறையில் நுழைந்த சிறிது நேரத்திலேயே ஆதியின் அலறல் கேட்கவும் இரு பெண்களும் விழுந்தடித்துக் கொண்டு ஆதியின் அறையை நோக்கி ஓடினர். அங்கே சோபாவில் அமர்ந்து தலையைப் பற்றியவாறு முகமெல்லாம் சிவந்து போய் ஆதி இருக்கவும் பதறியபடி அவன் அருகே சென்ற ஆராதனா "சார்! சார்! என்ன நடந்திச்சு?" என்று அவன் தோளைப் பற்றி கேட்டாள். அவளது கைகளை பற்றியபடி அவனது மேசை அருகே திரும்பாமல் கையை நீட்டி சுட்டிக்காட்டியவன்

"ஆரா! அங்க..அங்க..கட்டிப் போட்டு இருக்காங்க!"

என்று கூறவும் அவன் சொன்ன திசை நோக்கி திரும்பிய ஆராதனா அதிர்ந்து போனாள். ப்ரத்தியுஷா புதிதாக இணைந்ததால் அவளுக்கு இதைப்பற்றி தெரியவில்லை. ஆராதனா புதிதாக சேர்ந்த பொழுது முதலாவதாக ஆதி அவளுக்கு சொன்ன விடயம் "எந்த பொருட்களும் கட்டி வைத்து இருக்க கூடாது. அதுவும் முக்கியமாக கேபிள் வயர்ஸ் எதுவுமே கட்டி வைத்து இருக்க கூடாது" என்பது தான். அதனாலேயே ஆதி செல்லும் இடங்களுக்கு முன்னதாகவே சென்று அவனை அவ்வாறு சந்தர்ப்பங்களை நோக்க விடாமல் மிகவும் கவனமாக இருப்பாள். அதை எப்படி புதிதாக வந்தவளுக்கு கூற மறந்தாள் என்றே தெரியவில்லை. ஆயிரம் மன்னிப்புகளை வேண்டியபடியே ஓடி சென்று ப்ரத்தியுஷா கட்டி வைத்து இருந்த கேபிள்களை தனித்தனியாக பிரித்து விட்டவள் தண்ணீர் க்ளாஸை எடுத்து சென்று அவனிடம் தந்தவாறே

"குடிங்க சார். அங்க எதுவும் இல்லை. பாருங்க! பாருங்க"

என்று குழந்தைக்கு எடுத்து சொல்வது போல சொல்லிக்கொண்டு இருந்தாள். ப்ரத்தியுஷாவோ "என்னடா நடக்குது இங்க" என்று ஒன்றுமே புரியாமல் குழம்பியபடி விழித்துக்கொண்டு இருந்தாள். ஆதி நிதானத்திற்கு வந்தவுடன் ப்ரதீப்பிற்கு ஃபோன் செய்து விவரம் கூறிய ஆராதனா ப்ரதீப் வந்தவுடன் ப்ரத்தியுஷாவையும் இழுத்துக் கொண்டு சென்று தனது இருக்கையில் தொப்பென விழுந்தாள்.

மனது நிறைய நிறைய அவளது சிறுவயதில் நடந்த விடயங்களை அசைபோட்டுக் கொண்டு இருந்தது. ஆதிக்கும் அவ்வாறு ஏதோ ஒரு பிரச்சனை இருக்க வேண்டும் இல்லாவிடின் இப்படி ரியாக்ட் செய்யமாட்டான் என்று எண்ணவும் அவளது மனம் இன்னும் சோர்ந்து போனது. பின்னர் விழித்துக்கொண்டு இருந்த ப்ரத்தியுஷாவை பார்த்து தெளிந்தவள் அவளுக்கு விளக்கம் கூறிவிட்டு வேலைகளை பார்க்க தொடங்கினாள்.



அன்றைய நாள் வழக்கம் போல செல்ல தேநீர் இடைவேளையின் போது ஆராதனாவிற்கு அருகில் இருந்த கடைக்கு செல்லவேண்டி இருக்கவும் ஆதிக்கு தெரிவித்துவிட்டு விரைவில் திரும்பிவிட வேண்டும் என்ற நினைவுடன் ஓடி சென்றாள். கைப்பையை சரிசெய்தவாறே விரைந்தவள் முன்னால் வந்தவனை கவனியாது அவனுடனே மோதி நின்றாள். கையில் இருந்த கைப்பை கீழே விழவும் இடித்தவனை நோக்கி

"மன்னிச்சுகொள்ளுங்க சார்! கவனிக்காம வந்துட்டேன்"

என்று கூறினாலும் மனமோ இந்த சாயல் நான் எங்கேயோ பார்த்து இருக்கேனே என்று ஒரு பக்கம் யோசித்துக் கொண்டு இருந்தது. கன்னத்தில் குழிவிழ புன்னகைத்தவன்

"இட்ஸ் ஓகே! பதட்டப் படாதீங்க"

என்று கூறி சிதறி இருந்த அவளது பொருட்களை எடுத்துக் கொடுத்தான். நன்றி கூறிபெற்றுக் கொண்டவள் அவனைத்திரும்பித் திரும்பி பார்த்தவாறே சென்றாள்.

அவள் சென்றவுடன் விரைந்த ஷ்யாமும் ப்ரத்தியுஷா கேட்க கேட்க அவளை சட்டையே செய்யாமல் ஆதியின் அறையினுள் நுழைந்தான். அரவம் கேட்டு நிமிர்ந்த ஆதி ஷ்யாம் அங்கே வருவதையும் பின்னாலேயே ப்ரத்தியுஷா துரத்தியபடி வருவதையும் பார்த்து தலையில் அடித்துக்கொண்டவன்

"மிஸ்.பிரத்தியுஷா! இவன் என்னோட அண்ணா!"

என்றதும் அதிர்ந்து அப்படியே நின்றாள். துரத்தி வந்தவளை திரும்பிப் பார்த்து புன்னகைத்த ஷ்யாம் அவள் சென்றதும் ஆதியை நோக்கி முறைத்தான். ஆதியும் எழுந்து வந்தவன்

"இப்போ எதுக்கு இங்க வந்த?" என்று விறைப்பாக கேட்டான். அவனைப் பார்த்து கிண்டலாக சிரித்த ஷ்யாம்
"இவ்வளவு விறைப்பா கேட்க உனக்கு தகுதியே இல்ல ஆதி! அண்ணாவை நீ தான் வந்து பார்த்து இருக்கனும்! நீ எனக்கு செய்த அநியாயத்தை மறந்துட்டு நான் இங்க வந்தா இவ்வளோ சலிச்சுக்கிற?"
"எப்போ இதை விடப்போற ஷ்யாம்? நீ மாறவே இல்லை"
"எப்படி மறக்க சொல்ற ஆதி? நீ செய்தது சின்ன தப்பு இல்லை"
"அது சின்ன வயசுல நடந்த விஷயம் ஷ்யாம்! அதுனால தான் நான் எல்லாரையும் விட்டு ஒதுங்கி இருக்கேன்"
"ஹ!"
"எதுவா இருக்கட்டும். இனி என்னோட இடத்துக்கு வராத ஷ்யாம்"
"இது அப்பாவோட கம்பனி ஆதி"
"இது எனக்கு என்று அப்பா தந்தது! வெளிநட்டுல இருக்கிற எல்லா சொத்தும் உனக்கு தானே! "
"ஹ! ஆனா உன்னோட பொருட்கள் மேல தான் எனக்கு கண் போகுது"

என்று கூறி கண்ணடித்து விட்டு கூலர்ஸை அணிந்தவன் விரைந்து வெளியேறினான். செல்லும் பொழுது ப்ரத்தியுஷாவைக் கண்டு ஒரு விநாடி தயங்கினாலும் ஏதும் பேசாமலே சென்றான்.

**இதயம் துடிக்கும்...**

# மூலிகை குடிநீர்

N.ஹரிசாந்.

இலங்கையில் கொரோனா(*covid 19*) வைரஸினால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை அதிகரித்து கொண்டே வருகிறது. இதில் உள்ள சிறிய கசப்பான உண்மையை அனைவரும் ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும் அந்த கசப்பான உண்மை என்னவென்றால்...

இந்த தீநுண்மி( வைரஸ்) ஆல் 81% ஆண்களும் 19% பெண்களும் பாதிக்கப்பட்டுள்ளனர் அதிலும் 41 தொடக்கம் 55 வயதுக்கு உட்பட்டோரே இவ் நோய்த்தாக்கத்தில் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். இது இலங்கையின் புள்ளி விவரம் ஏனைய நாடுகளிலும் ஆண்களே அதிகம் பாதிப்புற்றிருப்பார்கள் புள்ளி விவரங்களை ஆராய்ந்தால் உண்மை புலப்படும். ஆண்கள் ஏன் அதிகம் பாதிக்கப்படுகின்றார்கள் என்ற கேள்வி இங்கே பதியப்படுகிறது?

நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக உள்ளவர்களே அதிகம் பாதிக்கப்படுகின்றனர் என்பது நாம் அனைவரும் அறிந்த உண்மை. ஆகவே இத் தகவலின் அடிப்படையில் அநேக ஆண்கள் நோய் எதிர்ப்பு சக்தி குறைந்தவர்கள் என்ற முடிவுக்கு வர முடிகிறது. அவ்வாறாயின் அதன் அடிப்படை உண்மை தன்மை என்ன??

அநேக ஆண்கள் குடும்பத்திற்காக உழைப்பை முன்னிறுத்தி தங்களது சுய உணவு மற்றும் ஆரோக்கியத்தில் அதிகம் கவனம் செலுத்துவதில்லை அதிலும் 60% ஆன ஆண்கள் புகைத்தல் பழக்கம் உடையவர்களாக இருத்தல்(*Active smokers*) அதைவிட புகைக்கும் நண்பர்கள் வட்டாரத்தில் இருத்தல்(*passive smokers*) இவ்வாறான செயற்பாடுகளால் ஆண்களின் நோய் எதிர்ப்பு சக்தி குறைந்துவிடுகிறது(சுவாச நோய்நிலை). மேலும் குடும்ப நிலை பற்றிய ஆழ்ந்த யோசனை கவலைகளும் அவர்களை விட்டுவைப்பதில்லை(பெண்களுக்கும் உண்டு).

இந்த நவீன உலகில் அனைவரும் எந்திரமாக திரிகின்றோம் இதில் இலகுவான வழி முறைகளை மட்டுமே அனைவரும் விரும்புகின்றோம் அந்த வகையில் உங்கள் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க இலகுவான வழி முறைகளும் உள்ளன. வாரத்தில் 7 நாட்கள் உள்ளது அந்த 7 நாட்களும் நீர் அருந்தாமல் எவரும் இருப்பதில்லை எனவே அந்த 7 நாட்களும் 7 விதமான நீர்களை அருந்த முடியும். முதல் நாள் இரவு நீங்கள் நாளை அருந்த உள்ள நீரில் இந்த மூலிகை ஒன்றை போட்டு அடுத்த நாள் முழுவதும் இந்த நீரை அருந்துங்கள்.

ஒருமுறை மூலியை சுத்தமாக கழுவி விட்டு நீரில் இடுங்கள்.நீரை ஊற்றி வைக்கும் பாத்திரம் செப்பு அல்லது மண் கூசா/ மண்பானை ஆக இருந்தால் உத்தமம். முடியுமானால் மதிய நேரங்களில் எலுமிச்சை பழரசமும் அருந்துங்கள்.

கொரோனாவின் வீரியம் குறைந்து அதுவாகவே இறந்துவிடும் வரை எமது எதிர்ப்பு சக்தியை நாம் அதிகரிப்போம்.

*Monday*(திங்கள்)
புதினா / *Mentha arvensis / Corn mint*

*Tuesday*(செவ்வாய்)
துளசி / *Ocimum sanctum / Holy basil*

*Wednesday*(புதன்)
வெந்தயம் / *Trigonella foenum graecum / Fenugreek*

*Thursday*(வியாழன்)
சின்னச்சீரகம் / *Cuminum cyminum / Cumin*

*Friday*(வெள்ளி)
மிளகு / *Piper nigrum / Black pepper*

*Saturday*(சனி)
கற்பூரவள்ளி / *Anisochilus garnosus / Thick leaved lavander*

*Sunday*(ஞாயிறு)
கொத்தமல்லி / *Coriandrum sativum / Coriander*



*2007 ஆம் ஆண்டு T-20 உலகக்கோப்பை கொடுத்த உத்வேகம் அடுத்தடுத்த ஆண்டுகளில் எதிரணிகளுக்கு பலத்த தலையிடியாக மாறியது என்றே சொல்லலாம். இரத்தின சுருக்கமாக சொல்ல வேண்டும் என்றால் 2007,2008,2009 ஆம் ஆண்டுகளில் சர்வதேச கிரிக்கெட் சபை வெளியிட்ட அந்த வருடத்திற்கான ஒருநாள் சரவதேச அணியில் யுவராஜ் சிங் இடம்பிடித்திருந்தார்.*

அக்னி

*அந்த உலக கோப்பையை தொடர்ந்து நடைபெற்ற ஆஸ்திரேலிய அணியுடனான தொடரில் மூன்றாவது போட்டியில் சதம் அடித்தார். ஏனைய போட்டிகளில் சொதப்பினாலும் அடுத்து நடைபெற்ற பாகிஸ்தான் அடியுடனான ஐந்து போட்டிகள் கொண்ட ஒரு நாள் தோடரில் நான்கு போட்டிகளில் அரைச்சம் கடந்தார். அந்த தொடரின் தொடர்நாயகனாகவும் மிளிர்ந்தார். 2008 ராஜ்கோட்டில் நடைபெற்ற இங்கிலாந்து அணியுடனான போட்டியில் ஆட்டமிழக்காமல் 78 பந்துகளில் 138 ஓட்டங்களை குவித்தார். அந்த போட்டியில் 64 பந்துகளில் சதம் கடந்தார் யுவ*





*ராஜ். அது அன்றைய நாளில் இந்திய வீரர் ஒருவரால் பெறப்பட்ட இரண்டாவது அதிவேக சதமாக பதியப்பட்டது. முதல் இடத்தில் நியூசிலாந்து அணிக்கு எதிராக அசாருதீன் 62 பந்துகளில் பெற்ற சதம் பதிவாகி இருந்தது. அதற்கு அடுத்த போட்டியிலும் சகலதுறைகளிலும் அசத்தினார் யுவராஜ். இந்தோர் இல் நடைபெற்ற அந்த போட்டியில் 122 பந்துகளில் 118 ஓட்டங்களை பெற்ற யுவராஜ் பந்துவீச்சிலும் நான்கு இலக்குகளை சாய்த்தார். இந்த இரண்டு போட்டிகளிலும் ஆட்டநாயகனாகவும் தெரிவானார் யுவராஜ்.*




*தொடர்ந்து இங்கிலாந்து அணியுடனான டெஸ்ட் தொடரிலும் சேர்க்கப்பட்டார் யுவராஜ். சென்னையில் நடைபெற்ற முதல் டெஸ்டில் ஆட்டமிழக்காமல் 85 ஓட்டங்களை குவித்தார். அதனை தொடர்ந்து நடைபெற்ற நியூசிலாந்து டெஸ்ட் தொடரிலும் சேர்க்கப்பட்டு இருந்தார் யுவராஜ். அந்த தொடரில் நேப்பியரில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் இரண்டாவது இன்னிங்க்ஸ் இல் follow on முறையில் ஆடிக்கொண்டிருந்த இந்திய அணிக்கு மிகவும் அதிரடியாக ஆடி 54 ஓட்டங்களை குவித்து தோல்வியில் இருந்து மீட்டதோடு அந்த தொடரை இந்திய அணி 1-0 என்ற கணக்கில் கைப்பற்றவும் இந்த இன்னிங்க்ஸ் கை கொடுத்தது.*
*முதலே குறிப்பிட்டது போல 2008,2009 இல் தொடர்ச்சியான சிறந்த பெறுபேறுகள் மூலம் சர்வதேச கிரிக்கெட் சபையின் ஒருநாள் அணியில் இடம்பிடித்தார் யுவராஜ்.*

ஆனாலும் 2010 சுமாரான ஒரு வருடமாகவே அமைந்தது எனலாம். 2009 மேற்கிந்திய தீவுகளில் நடைபெற்ற T-20 உலகக்கோப்பை தொடரில் இருந்து திரும்பிய இந்திய அணி அடுத்து ஆசியக்கோப்பைக்கு தயாராகிக்கொண்டு இருந்தது. ஆனாலும் ஆசியக்கோப்பைக்கான இந்திய அணியில் இருந்து யுவராஜ் கழற்றி விடப்பட்டார். துடுப்பாட்டத்தில் சொதப்பினார், உடல்தகுதி பிரச்சினை, ஒழுக்காற்று நடவடிக்கை தான் காரணம் என பல கொசுறுகள் உலாவ தொடங்கின. அதற்கு ஏற்றாற்போல உதவித்தலைவர் பொறுப்பு 2009 ஆரம்பத்தில் சேவாக்கின் கைகளிற்கு சென்றது. Form சொல்லிக்கொள்ளும்படியான பெறுபேறுகள் இல்லை. கடந்த இரண்டு வருடங்களில் எதிரணிகளுக்கு சிம்ம சொப்பனமாக திகழ்ந்த யுவராஜ் தடுமாறினார்.

அது தடுமாற்றம் அல்ல புயலுக்கு முன்னரான அமைதி என உணர்ந்து கொள்ள அனைவரும் 2011 ம் ஆண்டு உலகக்கோப்பையை கடக்க வேண்டி இருந்தது. 2010 ஆரம்பத்தில் உடல்நலம் இல்லை என அணியில் இருந்து நீக்கப்பட்ட யுவராஜ் 2011 உலக கோப்பையின் போது இரத்த வாந்தி என மூன்று சந்தர்ப்பங்களில் நிலைகுலைந்தார். உலக கோப்பையின் முடிவில்



இல்லாமல் தவித்து வந்த யுவராஜ் 2010 ஆரம்பத்தில் ஆசிய கோப்பை அணியில் இருந்து ஓரம்கட்டப்பட்டார். அத்தோடு டெஸ்ட் போட்டிகளில் முதல் போட்டியிலேயே ரெய்னா சதம் அடித்ததும், புஜாராவின் எழுச்சியும் யுவராஜ் சிங் ஐ முற்றுமுழுதாக டெஸ்ட் அணியில் இருந்து ஓரம்கட்டியது. ஆனாலும் ஆசிய கோப்பையை தொடர்ந்து நடைபெற்ற இலங்கை அணியுடனான ஒரு நாள் தொடரிற்கு அழைக்கப்பட்டு இருந்தார் யுவராஜ் சிங். ஆனாலும் புற்றுநோயினால் தாக்கப்பட்டிருப்பதை தெரிவித்த யுவராஜ் சிங், அதனை மறத்துக்கொண்டு உலகக்கோப்பையை இந்திய அணிக்கு பெற்றுக்கொடுக்க தயாராகிக்கொண்டு இருந்தார் இந்த மன உறுதி கொண்ட யுகவீரன் என்றாலும் மறுப்பதற்கில்லை.

*2010 இல் ஓய்வெடுத்துக்கொண்டு எதிரிகளை நோட்டம் விட்டுக்கொண்டருந்த புயல் 2011 உலகக்கோப்பையில் மையம் கொள்ள காத்திருந்தது...*